இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 82 - ஒலி : 98 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - கார்த்திகை 01 - வெள்ளிக்கிழமை 17 நவம்பர் 2023 - வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 98: Thiruvalluvar Year - 2054 - Karthigai 01- Friday 17 November 2023 - Dak 8 Pages ₹ 5.00

## உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் நிலையில் - 10 மசோதாக்களை திருப்பி அனுப்பிய ஆளுநர்!

# தமிழ்நாடு சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் நாளை நடைபெறுகிறது!

## மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி அனுப்ப முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

**சென்னை, நவ. 17-**

**சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் நீண்ட காலமாக நிலுவையில் வைத்திருப்பதற்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், உச்சநீதிமன்ற உத்தரவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பணிந்துள்ளார். நேற்று 10 மசோதாக்களை அரசுக்கு ஆளுநர் அனுப்பியுள்ள நிலையில் சட்டமன்ற சிறப்புக் கூட்டம் நாளை (18.11.2023 - சனிக்கிழமை) நடைபெறுகிறது. இதில் அந்த மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி அனுப்பிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.**



சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்பட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை ஆளுநர் ஆர்.என்.ரவியால் முடக்கப்பட்டிருப்பதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

மாநில பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் மசோதா,

தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா,

அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணைவேந்தரை தமிழ்நாடு அரசே நியமிக்க அதிகாரம் அளிக்கும் மசோதா உள்ளிட்டவற்றை ஆளுநர் ஆர்.என். ரவி கிடப்பில் போட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆளுநரால் நெடு நாளாக கிடப்பில் போடப்பட்ட மசோதாக்கள்!**

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு நடத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கும் மசோதாக்கள் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளாக குறைப்பது தொடர்பான மசோதா மதுரை, கோவை, திருப்பூர், ஒசூர் நகர வளர்ச்சிக் குழுமங்கள் உருவாக்குவது தொடர்பான தமிழ்நாடு நகர ஊரமைப்பு திட்ட மசோதா உள்ளிட்டவற்றையும் ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்.

இதுதவிர, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா மீதான குட்கா ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை தொடங்க சி.பி.ஐ. கோரிய அனுமதிக்கான கோப்புகளிலும் கையெழுத்திடாமல் உள்ளார். இதேபோல், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.சி.வீரமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கி ஊழல் தடுப்பு, கண்காணிப்பு இயக்குநரகம் இசைவு ஆணை கோரிய கோப்பிலும் ஆளுநர் கையெழுத்திடாமல் உள்ளார். அரசின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என்று மனுவில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை ஆளுநர் ஆர்.என்.ரவி பறித்து வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஆளுநரின் செயல்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்த உச்சநீதிமன்றம்!**

இந்த மனுவை கடந்த வெள்ளிக்கிழமை விசாரித்த உச்சநீதிமன்றம், ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டு மிக முக்கியமானவை என்று தெரிவித்தது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், அரசியலமைப்புச் சட்டப்படி மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் என்று தெரிவித்தனர். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிக்கிறது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் மற்றும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பவும், ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் ஆஜராகவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்கு வரும் 20ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.

**ஜனநாயகத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஆளுநர்கள்!**

இதற்கிடையே, கடந்த வாரம் பஞ்சாப் மாநில ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றம், சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்களை கிடப்பில் போடும் ஆளுநர்களின் செயல் ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என்றும், ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார் என்றும் கண்டனம் தெரிவித்தது.

மசோதாக்களை எத்தனை நாட்களுக்குத்தான் ஆளுநர் இப்படி கிடப்பில்போட்டிருப்பார்? என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். ஆளுநர்களுக்கு சில அதிகாரங்கள் உள்ளன. அதற்காக மசோதாக்களை கிடப்பில் போட முடியாது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிக அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குபவராக ஆளுநர் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல் சாசனம் இயற்றப்பட்டுள்ளது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

**உச்சநீதி மன்ற உத்தரவுக்கு பணிந்த ஆளுநர் ரவி!**

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தின் கண்டனம் எதிரொலியால், ஆளுநர் மாளிகையில் நீண்ட காலமாக கிடப்பில் போட்டிருந்த 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார். சில மசோதாக்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் இருந்த நிலையில், இத்தனை நாட்களாக உறங்கிக் கொண்டிருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, தற்போது உச்சநீதிமன்ற உத்தரவுக்கு பணிந்துள்ளார்.

இதனையடுத்து தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நாளை (சனிக்கிழமை) நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்கள் மீண்டும் இயற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்படும். அதற்கு ஆளுநர் ஒப்புதல் தந்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். மாநில அரசின் சட்டங்களை மதிக்காத ஆளுநர்களை உச்சநீதிமன்றம் கடுமையாக சாடியுள்ள நிலையில் மேற்கண்ட நடவடிக்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

> **“சென்னை பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா, தமிழ்நாடு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா, தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,**
>
> **அண்ணா பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா ஆகிய 10 மசோதாக்களை ஆளுநர் மாளிகை திருப்பி அனுப்பியுள்ளது.”**

---

## மக்கள் தொகை அடிப்படையில் எம்.பி.பி.எஸ் இடங்களை

## அனுமதிக்கும் உத்தரவை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது!

புதுடெல்லி, நவ.17-

நாடு முழுவதும் எம்.பி.பி.எஸ். இடங்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள் அடங்கிய நெறிமுறைகளை தேசிய மருத்துவ ஆணையம் கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியிட்டது. புதிதாக மருத்துவக் கல்லூரியைத் துவங்க வேண்டும் என்றாலோ, ஏற்கனவே உள்ள கல்லூரிகளில் இருக்கும் இளநிலை மருத்துவப் படிப்பு இடங்களை அதிகரிக்க வேண்டும் என்றாலோ குறைந்தபட்சமாக என்னென்ன வசதிகள் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டு இருந்தது. குறிப்பாக, ஒரு மாநிலத்திலோ, யூனியன் பிரதேசத்திலோ பத்து லட்சம் மக்கள்தொகைக்கு 100 எம்.பி.பி.எஸ் இடங்கள் வீதம் ஒதுக்கப்படும் என்றும் அதிகபட்சம் 150 எம்.பி.பி.எஸ் இடங்களுக்கு மட்டுமே இனி மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும், தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்தப் புதிய நடைமுறை அடுத்த கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் உத்தரப்பிரதேசம், பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களில் 40 ஆயிரம் மருத்துவ இடங்களை அதிகரிக்க ஒன்றிய அரசு திட்டமிட்டது. ஒன்றிய அரசின் இந்த கட்டுப்பாடு காரணமாக தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் புதிதாக மருத்துவக் கல்லூரி தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் போன்ற வட மாநிலங்களில்

மருத்துவ இடங்களை அதிகரிக்கும் வகையில் உள்நோக்கத்துடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக புகார்கள் எழுந்தன.

ஒன்றிய அரசின் இந்த முடிவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்.

ஒன்றிய அரசின் இந்த முடிவு மாநில உரிமையில் நேரடி ஆக்கிரமிப்பு எனவும், இதனைக் கைவிட வேண்டும் என்றும் ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். இந்நிலையில், வரும் கல்வியாண்டு முதல் அமல்படுத்த திட்டமிட்டு இருந்த, மக்கள் தொகை அடிப்படையில் எம்பிபிஎஸ் இடங்களை அனுமதிக்கும் உத்தரவை தேசிய மருத்துவ ஆணையம் நிறுத்தி வைத்துள்ளது. அனைத்து மாநிலங்களுடன் ஆலோசித்து ஒருமித்த முடிவை எட்டும் வரை கட்டுப்பாடுகள் விதிக்கும் முடிவு ஒத்திவைக்கப்படுவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

---

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்

## இன்று புயலாக மாற வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ. 17-

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக வலுப்பெற்று வங்கதேசத்தில் கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மேற்கு வங்கக்கடலில் நிலை நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 18 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. தொடர்ந்து வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து இன்று புயலாக வலுப்பெறும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. புயல் வலுவிழுந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வங்கதேசத்தில் மோங்கலா கேபுபரா இடையே கரையை கடக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. புயல்சின்னம் கரையை கடக்கும் போது மணிக்கு 75 கிலோ மீட்டர் வேகத்தில் காற்றுவீச வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

---

## தமிழ்நாட்டில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு!

### சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ.17-

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் இலங்கை பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக,

இன்று (17.11.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை (18.11.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.



(19.11.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி. ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

(20.11.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

(21.11.2023 மற்றும் 22.11.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 17-11-2023

# ‘டாக்டர்’ சங்கரய்யா புகழ் வாழ்க!

புரட்சியாளர்களின் மரணம் - புரட்சியாளர்களின் வீரத்தை மட்டும் அடையாளப்படுத்துவது இல்லை. அத்தோடு துரோகிகளின் துரோகத்தன்மையையும் அடையாளம் காட்டுவதாக அமைந்திருக்கும்.

‘சாதாரண’ சங்கரய்யாவாக இருந்தவர் - மரணிக்கும் தருவாயில் - ‘டாக்டர்’ சங்கரய்யாவாக மறைந்திருக்கிறார். ஆளுநர் ஆர்.என்.ரவி கொடுக்க மறுத்ததால் கிடைக்காமல் போய்விடவில்லை அந்தப் பட்டம். சங்கரய்யாவை நினைப்பவர்கள் அனைவருக்கும், அந்த டாக்டர் பட்டமும் நினைவில் இல்லாமல் போகாது. அப்படியானால் அவர் ‘டாக்டர்’ சங்கரய்யாதானே!

**சங்கரய்யாவைப் பற்றிப் பேசும் போது, அவருக்கு ‘டாக்டர்’ பட்டம் கொடுக்க மறுத்தவர்களும் நினைவுக்கு வரத்தானே செய்கிறார்கள். அதனால்தான் புரட்சியாளர்கள் எப்போதும் துரோகிகளையும் அடையாளம் காட்டிவிட்டே மரணம் அடைகிறார்கள் என்கிறோம்!**

அடிமை இந்தியாவில் நான்கு ஆண்டுகள் சிறையிலிருந்தவர் மட்டுமல்ல, ‘சுதந்திர’ இந்தியாவிலும் நான்கு ஆண்டுகள் சிறையில் இருந்தவர். மூன்றாண்டு காலம் தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்தவர்.

தங்கள் இயக்கத்தின் தியாக வரலாற்றை ஒருமுறை தோழர் சங்கரய்யா சுருக்கமாக இப்படி எழுதினார்...

“இந்திய விடுதலைக்காக கம்யூனிஸ்ட்கள் ஏற்றுக் கொண்ட தியாகங்கள் இணையற்றவையாகும். கப்பற் படை எழுச்சி, தெலுங்கானா போராட்டம், நாடு தழுவிய பொது வேலைநிறுத்தங்கள் என சக்திமிக்க பல போராட்டங்களில் கம்யூனிஸ்ட் இயக்கம் முன்நின்றது. தமிழ்நாட்டிலும் இப் போராட்டங்களுக்கு ஆதரவாக வலுவான இயக்கங்கள் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் நடந்தன. இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் சந்தித்த சதி வழக்குகள் ஏராளம். ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தொடுத்த பெஷாவர், மீரட், கான்பூர் சதி வழக்குகள் மட்டுமல்ல. திண்டுக்கல் அக்னீஸ்மேரி மதுரை சிறையில் மாண்டார். 1946ஆம் ஆண்டில் கோவை மாவட்டம் சின்னியம்பாளையத்தில் வர்க்கப் போராட்டத்தில் முன்நின்ற ராமய்யன். சின்னையன். ரங்கண்ணன், வெங்கடாசலம் ஆகிய நான்கு தோழர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

1948 முதல் 1951 வரை கம்யூனிஸ்ட் கட்சி, ஆட்சியாளர்களால் தடை செய்யப்பட்டது. சிறைச் சாலைக்குள்ளும் அடக்குமுறை தொடர்ந்தது. இக்காலகட்டத்தில் அரசின் அடக்குமுறைகளுக்கும், ஆளும் வர்க்கத்தின் தாக்குதலுக்கும் பல கம்யூனிஸ்ட்கள் பலியாயினர். களப்பால் குப்பு. தஞ்சை சிவராமன். வாட்டாக்குடி இரணியன், மதுரை மாரி, மணவாளன், தூக்குமேடை பாலு, தில்லைவனம், பொதும்பு பொன்னையா என பலரும் தம் இன்னுயிரை ஈந்தனர். சேலம் சிறை துப்பாக்கிச் சூட்டில் 22 கம்யூனிஸ்ட்கள் படுகொலை செய்யப்பட்டதும் இக்காலத்தில்தான். சிறைச்சாலைக் கொடுமைகளை எதிர்த்து அன்னை லட்சுமி உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்ததும் இக்காலம்தான். கடலூர் சிறையில் இதே காலத்தில் ராகவய்யா, உத்திராபதி, சீதாராமய்யா ஜோகய்யா ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்....” என்று எழுதினார் சங்கரய்யா. இத்தகைய தியாக வாழ்க்கையோடு தியாக வாழ்க்கையாக வாழ்ந்தவர் அவர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மாணவர்களை ஈடுபடுத்தியவர் என்.சங்கரய்யா. அமெரிக்கன் கல்லூரி மாணவராக அவர் அப்போது இருந்தார். அவர் அன்று உருவாக்கியதுதான் மதுரை மாணவர் சங்கம் ஆகும். தேச விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக அன்றே அடையாளப்படுத்தியவர் அவர். ‘இந்தியாவை இந்தியர்கள் ஆளவேண்டும்’ என்பதைவிட முக்கியமாக அது எத்தகைய இந்தியாவாக அமைய வேண்டும் என்பதை அடையாளப்படுத்துபவராகவும் அவர் இருந்தார். அத்தகைய மாணவர்களை உருவாக்கினார். நெல்லை ஆட்சியர் அலுவலகத்துக்கு முன்னால் நடைபெற்ற போராட்டத்தில் சங்கரய்யாவை போலீசார் தாக்கி மண்டையை உடைத்தார்கள். கைது செய்யப்பட்டார். மாணவர் இயக்கத் தலைவராக சிறைக்குள் சென்ற சங்கரய்யா, வெளியில் வந்ததும் மதுரை மாவட்டச் செயலாளராக ஆனார். 1945 முதல் 2023 வரை போராட்ட வாழ்க்கை அவருடையது. மதவாதத்துக்கு எதிராக கடுமையாக இறுதிவரை பேசி வந்தார்.

அதனால்தான் அவருக்கு ‘டாக்டர்’ பட்டம் வழங்க மறுத்தது கிண்டி. **மதுரை மக்களால் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டு மக்களால் வாழ்நாள் முழுக்க ‘தோழர்’ என்று அழைக்கப்பட்ட அவருக்கு டாக்டர் பட்டம் வழங்க மறுத்ததால் அவர்கள் தங்களைத் தாங்களே கீழ்மைப்படுத்திக் கொண்டார்கள். தங்களது தகுதியை தாங்களே அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.**

‘தகைசால் தமிழர்’ விருதை தோழருக்கு வழங்கி பெருமைப்படுத்தினார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதற்காகத் தரப்பட்ட பத்து லட்சம் நிதியையும் முதலமைச்சரின் கோவிட் நிவாரண நிதிக்கு அளித்தார். 1972 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கான நிதி வழங்கப்பட்டபோது அதனையும் மறுத்தார். ‘நாங்கள் சுதந்திரத்துக்காகத்தான் போராடினோம், பென்ஷனுக்காக அல்ல’ என்றார். கல்லூரிப் படிப்பை முடிக்காமலேயே தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர் அவர். ‘நீங்கள் படித்து முடித்துவிட்டு வேலைக்கு ஏன் போகவில்லை?’ என்று கேட்கப்பட்ட போது, “நாங்கள் வேலைக்காகப் போராடுபவர்கள் அல்ல, விடுதலைக்காகப் போராடுபவர்கள்” என்று சொன்னவர் அவர்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் மூலமாக ‘மதிப்புறு முனைவர்’ பட்டம் வழங்க ஆவன செய்யப்படும் என்பதையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். அதை வழக்கம் போல ஆளுநர் ரவி தடுத்துவிட்டார். அதனை உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்கள் அறிக்கையாகவும், பேட்டிகள் மூலமாகவும் கண்டித்தார். அதன்பிறகும் ஆளுநர் மனம் மாறவில்லை. பட்டமளிப்பு விழாவையே புறக்கணித்தார் அமைச்சர். பல்கலைக் கழக செனட், சிண்டிகேட் உறுப்பினர்களும் புறக்கணித்தார்கள். பட்டமளிப்பு உரையே நிகழ்த்தாமல் தப்பித்து ஓடினார் ஆளுநர்.

“அதிகாரப்பூர்வமாய் ‘இந்திய’ தேசியக் கொடி உச்சி ஏறும் நிமிடம் வரை சிறையிலிருந்த விடுதலைப் போராட்ட வீரர் தியாகச் செம்மல் சங்கரய்யா மறைந்தார். முனைவர் பட்டம் வழங்க முட்டுக்கட்டையிட்ட மூடர்களுக்கும் சேர்த்து அரைக்கம்பத்தில் பறக்கட்டும் அந்தக் கொடி” - என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டு இருந்தார் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.

**புரட்சியாளர்கள், எப்போதும் துரோகிகளை அடையாளம் காட்டிவிட்டே மரணம் அடைகிறார்கள்!**

## 22 அடியை தாண்டியது செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம்!

திருப்பெரும்புதூர், நவ. 17-

24 அடி உயரம் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் இருப்பு 3,130 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்டம் 22.04 அடியாகவும் உள்ளது. சென்னை குடிநீர் தேவைக்கு விநாடிக்கு 104 கன அடி, உபரி நீர் வெளியேற்றம் விநாடிக்கு 25 கன அடி என்பது உட்பட விநாடிக்கு 162 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் 22 அடியை தாண்டி இருப்பதாலும், தொடர்ந்து மழை பெய்யும் என, வானிலை ஆய்வு மையம் அறிவித்திருப்பதாலும் நீர்வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

ஆகவே, அரசின் உயரதிகாரிகளுடன் ஆலோசித்து, நீர் வரத்துக்கேற்ப, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு அதிகளவில் உபரி நீர் வெளியேற்றப்படும்போது, அடையாற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும் எனவும், ஏரியின் நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது எனவும் நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதே போல், மழையால் திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் உள்ள சென்னைக்கு குடிநீர் தரும் ஏரிகளுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளதால், அந்த ஏரிகளின் நீர் இருப்பு மற்றும் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.




தூத்துக்குடி மாநகரத் தந்தை என அழைக்கப்படும் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் திருவுருவச் சிலையினை தூத்துக்குடி – பாளையங்கோட்டை சாலையில் உள்ள தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி மூலமாக திறந்து வைத்ததை தொடர்ந்து, தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாக தூத்துக்குடி தமிழ்ச்சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன், அமைச்சர் பெருமக்கள் பெ.கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# 10, 11 மற்றும் +2 பொதுத் தேர்வு அட்டவணை!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டார்!

சென்னை, நவ. 17 -

10, 11 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு அட்டவணைகளை தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டார்.

சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது 10,11 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கான அட்டவணையை வெளியிட்டார்.

**10ம் வகுப்பு பொதுத் தேர்வு**

10ம் வகுப்பு பொதுத் தேர்வு 2024 மார்ச் 26ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 8ம் தேதி வரை நடைபெறுகிறது.

மார்ச் 26ம் தேதி தமிழ் மற்றும் இதர மொழி பாடத் தேர்வும்,

28ம் தேதி ஆங்கிலத் தேர்வும்,

ஏப்ரல் 1ம் தேதி கணிதத் தேர்வும்,

ஏப்ரல் 4ம் தேதி அறிவியல் தேர்வும்,

ஏப்ரல் 8ம் தேதி சமூக அறிவியல் தேர்வும் நடைபெறுகின்றன. தேர்வு முடிவுகள்

மே 10ம் தேதி வெளியாகின்றன.

**11ம் வகுப்புத் தேர்வு**

11ம் வகுப்புத் தேர்வு மார்ச் 4ம் தேதி தொடங்கி 25ம் தேதி வரை நடைபெறுகிறது.

மார்ச் 4ம் தேதி மொழிப்பாடத் தேர்வும்,



7ம் தேதி ஆங்கிலத் தேர்வும்,

12ம் தேதி இயற்பியல், பொருளாதாரம், கணினி தொழில்நுட்பம் பாடங்கள் தேர்வும்,

14ம் தேதி புள்ளியியல், கணினி அறிவியல் பாடத் தேர்வும்,

18ம் தேதி உயிரியியல், வரலாறு, வணிக கணிதம் பாடத் தேர்வும்,

21ம் தேதி வேதியியல், கணக்குப்பதிவியல், புவியியல் பாடத் தேர்வும்,

25ம் தேதி கணிதம், விலங்கியல், வணிகவியல், உயிரி அறிவியல் பாடத் தேர்வும் நடைபெறுகின்றன.

மே மாதம் 14ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியாகின்றன.

**12ம் வகுப்பு தேர்வு**

12ம் வகுப்பு தேர்வு மார்ச் 1ம் தேதி தொடங்கி, மார்ச் 22ம் தேதி வரை நடைபெறுகிறது.

மார்ச் 1ம் தேதி மொழிப் பாடத் தேர்வும்,

மார்ச் 5ம் தேதி ஆங்கிலத் தேர்வும்,

8ம் தேதி கணினி அறிவியல், உயிரி அறிவியல், புள்ளியியல் பாடத் தேர்வும்,

11ம் தேதி வேதியியல், கணக்குப்பதிவியியல், புவியியல் பாடத் தேர்வும்,

15ம் தேதி இயற்பியல், பொருளாதாரம், கணினி தொழில்நுட்பம் பாடத் தேர்வும்,

19ம் தேதி கணிதம், விலங்கியல், நுண் உயிரியியல் பாடத் தேர்வும்,

22ம் தேதி உயிரியியல், தாவரவியல், வரலாறு, புள்ளியியல், வணிக கணிதம் பாடத் தேர்வும் நடைபெறுகின்றன.

பிறகு மே மாதம் 6ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியாகின்றன.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்தார்.

## புதுச்சேரியில் நீட் தேர்வு ரத்து

# தி.மு.க. கையெழுத்து இயக்கம்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்!

புதுடெல்லி, நவ. 17 -

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்பேரில் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணிகள் இணைந்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 50 நாளில் 50 லட்சம் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி உள்ளனர்.

அதன்படி புதுச்சேரி மாநிலத்தில் இருந்து ஒரு லட்சம் கையெழுத்து என்ற இலக்கோடு மாநில திமுக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணிகள் இணைந்து புதுச்சேரியில் நேற்று நீட்டுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை தொடங்கினார்கள்.

லப்போர்த் வீதியில் உள்ள மாநில கழக அலுவலகத்தில் நடந்த துவக்க நிகழ்ச்சிக்கு மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன் முன்னிலை வகித்தார்.

கையெழுத்து இயக்கத்தை மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., மாநில பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில துணை அமைப்பாளர் ஏ.கே. குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், வே. கார்த்திகேயன், வேலவன், தொகுதி செயலாளர் சக்திவேல், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணிஅமைப்பாளர்தாமோ தமிழரசன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முகிலன் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தமிழ்ப்பிரியன், உத்தமன், ரெமி எட்வின், தாமரைக் கண்ணன், கிருபாசங்கர், சந்துரு, வழக்கறிஞர் அணி பொருளாளர் தாமோதரன், மகளிர் அணி துணைத் தலைவர் பிரியதர்ஷினி, சமூக வலைதள பிரிவு சூர்யா, மாணவர் அணி துணை அமைப்பாளர் ஜான்சிராணி, ஜோசப், கீர்த்தி எழனி, யோகேஷ், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் ரவி, பாலபாரதி, சிவதாஸ், ஷாகுல், அருண் குமார், சுகுமார், உமாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள 23 தொகுதிகளிலும் பொது மக்களிடம் நீட்டுக்கு எதிரான கையெழுத்து இயக்க பணிகள் நடைபெறுகின்றன. புதுச்சேரி மாநிலத்தில் பெறப்படும் நீட்டுக்கு எதிரான ஒரு லட்சம் கையெழுத்து அட்டையை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி பின்னர் இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



விருதுநகர் மாவட்டம் , இராஜபாளையத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் ரூ.188.46 இலட்சம் மதிப்பில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.

## பருவமழை தீவிரம்

# மின்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு!




சென்னை, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (15.11.2023) நிதி,மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாட்டில் வட கிழக்கு பருவ மழை காரணமாக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நாட்களில் கனமழை பெய்யும் கடலோர மாவட்டங்களிலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் மின்துறை, சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து, தலைமை பொறியாளர்களுடனும் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, இயக்குனர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன், மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, நவ.17- தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில் மின்சாரத் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை ஏற்படக்கூடுமென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில் மின்சாரத் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு காணொலி காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (15.11.2023) ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்கள், அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள 9 மாவட்டங்களின் தலைமைப் பொறியாளர்களுடனும் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடனும், பொதுமக்களுக்கு தடையில்லா சீரான மின் விநியோகம் வழங்க எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை அமைச்சர் மேற்கொண்டார். மேலும், கனமழை பெய்து வரும் கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் மின் கட்டமைப்பில் ஏற்படும் சேதாரங்களை பொறுத்து, சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்கள், தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தளவாடப் பொருட்களுடன் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் அமைச்சர் அறிவுறுத்தினார். மேலும், சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும் செயல்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, அமைச்சர் தலைமையில் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மின்சார வாரியம் சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கடந்த 04.11.2023 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அனைத்தினையும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுக்கும் அமைச்சர் உத்தரவிட்டார்.

**தடையில்லா - சீரான மின்சாரம்!**

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக இது வரை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சேதமடைந்த 169 மின் கம்பங்கள் மற்றும் 72 மின் மாற்றிகள் உள்ளிட்ட அனைத்து சேதங்களும் துரித முறையில் சரி செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் தடையில்லா, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மிக கனமழை காரணமாக ஏற்படும் மின் சேதாரங்களை போர்கால அடிப்படையில் துரிதமாக சரி செய்வதற்காகவும், சீரமைப்பு பணிகளை விரைந்து முடித்து தடையில்லா சீரான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 44 மின்பகிர்மான வட்டங்களுக்கும், வட்டத்திற்கு 10 இலட்சம் வீதம் மொத்தமாக ரூ.4.4 கோடி நிதியினை உடனடியாக வழங்கிட அமைச்சர் உத்தரவிட்டார்.

பின்னர், அமைச்சர் மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்தளிப்பு மையம் (SLDC) மற்றும் சென்னை மின் பகிர்மான கட்டுப்பாட்டு மையம்(SCADA) ஆகியவற்றில் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வரும் சீரான மின் விநியோகம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

பொதுமக்கள் மின்தடை சம்பந்தமான புகார்களை 24X7 மணி நேரமும் செயல்படும் மின் நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தின் 94987 94987 என்ற அலைபேசி எண்ணின் வாயிலாகவும் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மின் தடை நீக்கம் மையம் வழியாகவும் தெரிவிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மழைக்காலங்களில் பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாளுமாறும், அறுந்து கிடக்கும் மின் கம்பிகளின் அருகில் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

## இந்தப் பிரச்சாரப் பயணம் மிகப் பெரிய வெற்றிப் பயணமாக அமைய வாழ்த்துகிறேன்!

# சேலம் மாநாடு - வரலாறு பேசும் மாநாடாக அமையும்!

## குமரியில் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியைத் தொடங்கிவைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

**கன்னியாகுமரி, நவ. 17 -**

**தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டையொட்டி தமிழ்நாடு முழுவதும் பயணிக்கும் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்து கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, ‘இந்தப் பயணம் மிகப் பெரிய வெற்றிப் பயணமாக அமையட்டும்” என்று வாழ்த்தினார்.**

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டையொட்டி, தமிழ்நாடு முழுவதும் பயணிக்கும் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரசாரப் பேரணியை, தி.மு.க இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரியில் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: -

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டிற்குப் பொதுமக்களை எல்லாம் அழைக்கின்ற வகையில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் இரு சக்கர வாகன பிரச்சாரப் பயணம் மேற்கொள்கின்ற, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்திருக்கக்கூடிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அருமைச் சகோதரர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அமைச்சர் அன்பில் மகேஷ்க்கு பாராட்டு!**

இங்கே கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் மகேஷ் அவர்கள் சொன்னதைப் போல் நேற்று நள்ளிரவு 12 மணியளவில், இங்கு வந்து இந்த நிகழ்ச்சி எவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பார்வையிட்டு, இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று, கடந்த 20 நாட்களாக உழைத்துக் கொண்டிருக்கக் கூடிய அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் இளைஞர் அணியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனென்றால், இப்போது மாவட்டச் செயலாளராக இருந்தாலும், அவர் இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய நற்பணி மன்றம் உருவாவதற்கு மிக முக்கியக் காரணமாக இருந்து, அதில் இன்றளவும் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர், தன் உழைப்பைக் கொடுத்துக் கொண்டிருப்பவர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி. அவருக்கு என் வாழ்த்துகள்.

**போருக்குத் தயாராகும் போர் வீரர்கள் போல் காட்சி!**

நாம் இங்கே இரண்டாவது மாநில மாநாட்டிற்குக் கூடி உள்ளோம். இந்த மாநில மாநாட்டிற்குப் பெயரே `மாநில உரிமைகள் மீட்பு மாநாடு’ என்பதை நீங்கள் உணர வேண்டும். மாநில அரசின் உரிமைகளை ஒவ்வொன்றாக ஒன்றிய அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டும், இதற்கெல்லாம் குரல் கொடுக்க வேண்டும் என்றுதான் நம்முடைய மாநில மாநாட்டை, சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடத்த இருக்கின்றோம்.

நான் தமிழ்நாடு முழுவதற்கும் கிட்டத்தட்ட இதுவரை 40 கழக மாவட்டங்களில் செயல்வீரர்கள் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன். செயல் வீரர்கள் கூட்டத்தில் கழகத்தின் நிர்வாகிகள், இளைஞர் அணி உறுப்பினர்கள், நிர்வாகிகள் எல்லாம் கலந்துகொண்டு அவர்களை எல்லாம் மாநாட்டிற்கு அழைக்கின்ற அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகின்றேன்.

அங்கு நடந்தது எல்லாம் செயல்வீரர் கூட்டம் என்றால், இங்கு உங்களை எல்லாம் பார்க்கும்போது, கம்பீரமாக இந்த மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு கருப்பு சிவப்பு டீசர்ட் போட்டுக் கொண்டு கிட்டத்தட்ட போருக்கு தயாராகின்ற போர் வீரர்கள் போல காட்சி அளிக்கின்றீர்கள். உங்களை எல்லாம் நான் வாழ்த்துகின்றேன்.

மாநாட்டுக்காக நான் நிர்வாகிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றேன். இளைஞர் அணி உறுப்பினர்களைச் சந்தித்து கொண்டிருக்கின்றேன். ஆனால், நீங்கள் அடுத்த 10, 15 நாட்களில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரையும் சந்திக்கப் போகின்றீர்கள். தி.மு.க.வின் வரலாற்றைப் பற்றிச் சொல்லப் போகின்றீர்கள். நாங்களெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று ஆயிரக்கணக்கான பேர்களைச் சென்று அழைக்கின்றோம். நீங்கள் லட்சக்கணக்கான பேர்களை சந்திக்கப் போகிறீர்கள்.

**இதுவரை 9 லட்சம் பேர் கையெழுத்து!**

இந்த ஒன்பது வருடத்தில், ஒன்றிய அரசு நம்முடைய தமிழ்நாட்டு மாநிலத்திற்கு என்னென்ன இன்னல்களை எல்லாம் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது. என்னவெல்லாம் இடையூறுகளைக் கொடுத்திருக்கிறது என்று மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும். நம்முடைய மாநாட்டிற்குப் பெயரே, `மாநில உரிமைகள் மீட்பு மாநாடு’ என்னென்ன உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்பதை நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

கல்வி உரிமை பறிக்கப்பட்டு உள்ளது.



முக்கியமாக நீட் தேர்வு திணிப்பு. அந்த விளக்கமும் உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும் Banneet.in என்ற இணையதளத்துக்குச் சென்று பொதுமக்களிடம் இந்த நீட் தேர்வினால் வரக்கூடிய தீமைகளை மக்களிடம் நீங்கள் கொண்டு சேர்க்க வேண்டும். 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற போகின்றோம், என்ற அந்த இலக்கு. இணையதளத்தில் இதுவரை 9 லட்சம் பேர்கள் கையெழுத்திட்டு இருக்கிறார்கள்.

போஸ்ட் கார்டு மூலமாக இதுவரை 10 லட்சம் பேர் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இந்த ஒரு மாதத்தில் இந்த 50 லட்சத்தைத் தாண்டி, இந்தக் கையெழுத்து இயக்கத்தை நீங்கள் வெற்றிகரமாகச் சென்றடையச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**மாநில உரிமை பறிப்பு!**

அதேபோல் நிதி உரிமை, இதுவரைக்கும் 9 வருடத்தில் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கொடுத்திருக்கக் கூடிய வரி ரூ.25 ஆயிரம் கோடி. ஆனால், ஒன்றிய அரசு நமது தமிழ்நாட்டிற்குத் திருப்பிக் கொடுத்தது வெறும் ரூ.2,000 கோடி. நாம் கொடுத்தது ரூ.25 ஆயிரம் கோடி, திரும்ப வந்தது ரூ.2,000 கோடி. இப்படி மாநில உரிமை ஒவ்வொன்றையும் நம்முடைய ஒன்றிய அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மீட்கத்தான் நம்முடைய மாநாடு.

**பயணம் சிறப்பாக அமையும்!**

மதுரையில் இரண்டு மாதத்துக்கு முன்பு ஒரு மாநாடு நடந்தது, உங்களுக்குத் தெரியும். எவ்வளவு கேலிக்கூத்தான மாநாடு. ஒரு மாநாடு எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்த மாநாடு நடந்தது. ஆனால், நம்முடைய இளைஞர் அணி மாநாடு, இவ்வளவு சிறப்பான எழுச்சியான மாநாட்டை இதுவரை வரலாற்றி லேயே பார்த்ததே இல்லை என்கிற பெருமையைத் தேடித் தரும்விதமாக ஒரு சிறப்பான மாநாடாக நம்முடைய இயக்கத்தின் வரலாறு பேசுகின்ற மாநாடாக, கொள்கையைப் பேசுகின்ற மாநாடாக அந்த மாநாடு நடக்க வேண்டும்.

அதனால்தான், உங்களையெல்லாம் நம்பி வந்திருக்கக்கூடிய அத்தனை பேரும் சிறப்பாகப் பயணத்தை மேற்கொண்டு நீங்கள் நான்கு மண்டலங்களாகப் பிரிந்து, 234 தொகுதிகளிலும் நீங்கள் சென்றடையப் போகிறீர்கள் வாக்காளர்களை மக்களைச் சந்திக்கப் போகின்றீர்கள். உங்களுடைய பயணம் சிறப்பாக அமைய வேண்டும்.

**முக்கியமான நான்கு திட்டங்கள்!**

இந்த மூன்று வருடத்தில் கழக ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம் என நம்முடைய தலைவர் அவர்கள் சொன்னதையும் செய்திருக்கிறார், சொல்லாததையும் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

முக்கியமாக ஒரு நாலே நாலு திட்டம், இதை மக்களிடம் கொண்டுபோய், நீங்கள் சேர்க்க வேண்டும். நமக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி இதை மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும். முதல் திட்டம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி, மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து பயணம். ஆட்சி அமைந்ததும் முதல் கையெழுத்திட்டார் நம்முடைய தலைவர் அவர்கள். இதன் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம்தோறும் குறைந்தது ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

அதேபோல் இரண்டாவது திட்டம், இது தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம் `புதுமைப்பெண் திட்டம்’ அரசுப் பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவிகள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்றால், எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அவர்களின் கல்வி ஊக்க தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது, வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய்.

**அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்!**

அதேபோல் இன்னொரு திட்டம் இதுவும் தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய மாணவர்கள் பள்ளிக்கு வர வேண்டும் என்பதற்காக, அரசுப் பள்ளிகளில் `முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’. 31 ஆயிரம் பள்ளிகளில் 17 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள். குழந்தைகள் பள்ளிக்கு வர வேண்டும் படிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு இந்தத் திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது. இப்போது பக்கத்து மாநிலமான தெலங்கானாவில் இருந்து வந்து இந்தத் திட்டத்தைப் பார்த்து அவர்களுடைய மாநிலத்தில் செயல்படுத்த தொடங்கி இருக்கிறார்கள்.

இது நான்காவது திட்டம். இது நம்முடைய தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். எப்போது செயல்படுத்தப் போகிறீர்கள் என்று எல்லோரும் கேட்ட திட்டம். இப்போது தலைவர் அவர்கள், இந்த மூன்று மாதங்களில் அறிவித்துச் செயல்படுத்த தொடங்கியாகி விட்டது.

கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில், `கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ வாயிலாக மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக் கூடிய திட்டம். ஒரு கோடியே 18 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும்.

**பாதுகாப்பாக பயணம் செய்வீர்!**

எல்லாவற்றையும் விட ஒரு மிக முக்கியம் 15 நாட்கள் நீங்கள் பயணம் செய்யப் போகிறீர்கள். கிட்டத்தட்ட 8,400 கிலோமீட்டர் பயணம் செய்யப் போகிறீர்கள். நீங்கள் அத்தனை பேரும் பாதுகாப்போடு பயணம் செய்ய வேண்டும்.

உங்களுடைய பாதுகாப்பும் முக்கியம். பொதுமக்களின் பாதுகாப்பும் முக்கியம். அனைத்து விதிகளையும் பின்பற்றி மிகவும் பாதுகாப்பாக பயணிக்கவும். ஏதாவது ஒரு தொகுதிக்குப் போகும்போது நேரம் ஆகிவிட்டது என்றால், அங்கே ஓய்வெடுத்துக் கொண்டு பிறகு பயணியுங்கள். உங்களுடைய குடும்பத்தினர் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். தலைவர் அவர்கள் உங்களை எல்லாம் பார்ப்பதற்கு சேலத்தில் காத்துக் கொண்டிருப்பார்.

இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும். எனவே வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள், இயக்கத்தினுடைய தோழர்கள் நற்பணி மன்றத்தை சேர்ந்த என்னுடைய தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் பயணம் மிகப்பெரிய ஒரு வெற்றிப் பயணமாக அமைய வேண்டும்.

நீங்கள் 188 பேர்களும் இந்தப் பிரச்சாரப் பயணத்தில் குறைந்தது இரண்டு மூன்று லட்சம் பேரையாவது நேரில் சந்தித்து, நம்முடைய மாநாடு எந்த நோக்கத்திற்காக நடைபெறுகின்றது என்பதைப் பொதுமக்களிடம் நீங்கள் தெரிவித்து, உங்களுடைய கடமையாற்றிப் பாதுகாப்பாக நீங்கள் எல்லாம் சேலத்திற்கு வரவேண்டும்.

உங்களை எல்லாம் நான் சேலத்தில் சந்திப்பதற்காகக் காத்துக் கொண்டிருப்பேன் என்று கூறி இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து இருக்கக்கூடிய என்னுடைய நண்பர் ராஜா தமிழ்மாறன் அவர்களுக்கும், இதையெல்லாம் சிறப்பாக ஏற்பாடு செய்த நம்முடைய அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் நற்பணி மன்றத்தைச் சேர்ந்த நம்முடைய அருமை சகோதரர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாகர்கோயில் மேயர் மகேஷ், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, கழக மகளிர் அணியின் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாணவர் அணித் தலைவர் ராஜீவ்காந்தி, தமிழன் பிரசன்னா, சூர்யாசே வியர், போஸ் வெங்கட், தமிழ்கேள்வி செந்தில்வேல், கழக இளைஞர் அணியின் துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, சீனிவாசன், அமைப்புச் செயலாளர் அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் துணைச் செயலாளர் சிவராஜ், ததேயூ பிரேம்குமார், புஷ்பலீலா ஆல்பன் உள்ளிட்ட மாவட்டக்கழக நிர்வாகிகள், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பாபு, கன்னியாகுமரி பேரூராட்சித் தலைவர் குமரி ஸ்டீபன் உள்ளிட்ட, அகஸ்தீசன், ஜெகநாதன், சுரேஷ், பிரின்ஸ் உள்ளிட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், நற்பணி மன்றச் செயலாளர் பி.கே.பாபு, வாகன பிரச்சாரப் பயணத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் கார்த்தி, பிரபின், ராஜ்குமார், சன் சுரேஷ்குமார் குட்டி, ரவிச்சந்திரன், ரூபன், முத்துக்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தி.மு.க. வழக்கறிஞர்அணி

## 15 மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், நாளை (18.11.2023 சனிக்கிழமை), காலை 9.00 மணியளவில் சென்னை8, எழும்பூர், எம்.எம்.டி.ஏ. அலுவலகம் அருகில் உள்ள “ஓட்டல் ரமடா”வில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, விழுப்புரம்வடக்கு, விழுப்புரம்தெற்கு, கள்ளக்குறிச்சிவடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணைஅமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 15 - 11 - 2023

**என்.ஆர்.இளங்கோ** எம்.பி..
செயலாளர் - தி.மு.க. சட்டத் துறை


பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 9

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.9.ந.க.எண்.இ1/3198/2023

மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| ம.அ.9.ந.க.எண்.இ1/3198/2023 ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் மண்டலம்-9, பகுதி - 24, வார்டு -111, கோபாலபுரத்தில் விளையாட்டு கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் பணி | ரூ.89.75 இலட்சங்கள் | ரூ.90,000/- | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 04.12.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 05.12.2023 மாலை 3.30 மணி

மா.வ.அ / மண்டல அலுவலர்
மண்டலம் - 9

செ.ம.தொ.இ / 6059 / ஒப்பந்தப்புள்ளி / 2023




தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்படும் தமிழ்நாடு மோட்டார் வாகன ஓட்டுனர் தொ.மு.ச. உறுப்பினரும் டாக்ஸி ஓட்டுநருமான விஜய் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தார். அவருக்கு தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பாக விபத்து உதவித் தொகையாக ரூபாய் 2 லட்சமும், அவரது ஈமச்சடங்கிற்காக ரூபாய் ஐந்தாயிரமும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அவரது துணைவியார் திவ்யாவிடம் வழங்கப்பட்டது. துணைவியாருக்கு பணிநியமன ஆணையும் வழங்கப்பட்டது.



நாகைமாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் பட்டமங்கலம் கிராமத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களின் சேதங்கள் குறித்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் ரமேஷ்சந்த்மீனா, நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் க.பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

## சென்னையில் மழை நீர் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த

# பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்தி சீர்படுத்திடுக!

### ஒன்றிய நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, நவ.17-



வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அவர்களுக்கு சென்னையில் மழை நீர் வெள்ளத்தை கட்டுப்படுத்த பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்தி சீரமைக்க ஒன்றிய நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்கக் கூறி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது :

இயற்கை அன்னையின் தீவிர எச்சரிக்கையாக கடந்த சில ஆண்டுகளாக சென்னை நகரம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் பற்றாக்குறைக்கும் வெள்ளத்திற்கும் இடையே சென்னை அடிக்கடி சிக்கித் தவித்து வருகிறது. மத்திய சென்னையில் ஓடும் கூவம் ஆறும் தென் சென்னையில் ஓடும் அடையாறும் வடசென்னையில் ஓடும் கொசஸ்தலை ஆறும் பக்கிங்ஹாம் கால்வாயால் வடக்கு தெற்கு ஆக இணைக்கப்பட்டுள்ளது இதனால் இயற்கையான நீர் அமைப்பை இந்த நகரம் பெற்றுள்ளது. இதனால் 75 ஏரிகள் மற்றும் 450 குளங்களுடன் கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் இணைக்கப்பட்டுள்ளன. இது ஒரு சிறப்பான நகர அமைப்பாக அமைந்தாலும், திட்டமிடப்படாத நகர வளர்ச்சியால், பெரிய தொழில்துறை வீடுகள் ஈரநிலங்களை அத்துமீறி ஆக்கிரமைத்து கொண்டிருக்கும் போது, பெரும்பாலான பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் குடியிருப்பு கோபுரங்களால் இந்த நீர் நிலைகள் மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்படாத மற்றும் சட்டவிரோத கட்டுமானம் பருவமழையின் போது மோசமான வடிகால்களை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நீர்நிலைகளின் பெல்ட்களில் வசிக்கும் நகர்ப்புற ஏழைகள் பெரிதும் பாதிப்பிற்கு ஆளாக்கப்படுகின்றனர்

நகரத்தில் உள்ள இயற்கை நீர்நிலைகள் வறண்டு வரும் நிலையில், அரசாங்கம் கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தை செயல்படுத்துகிறது, இது ஒரு விலையுயர்ந்த திட்டமாகும் என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டும். தூர்வாரப்பட்ட கால்வாய்கள் இன்று மாசடைந்து, அதிகளவில் வண்டல் மண் படிந்துள்ளதால், ஒவ்வொரு மழைக்காலத்திலும் நகருக்கு வரும் அதிகப்படியான மழைநீரைத் தேக்கி எடுத்துச் செல்லும் திறனற்று உள்ளது.

**நீர் திறப்பு பணிகள்!**

கடந்த இருபதாண்டுகளாக மிகவும் புறக்கணிக்கப்பட்ட வட சென்னை தொகுதி, நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அரசு அமைந்த பிறகு, சிறப்பு முயற்சி திட்டங்களின் மூலம் வடசென்னையின் வளர்ச்சிக்கு ரூ .1000 கோடி ஒதுக்கி வரலாற்று நிகழ்வை ஏற்படுத்தி உள்ளது.

வடசென்னைப் பகுதியில் வெள்ளப்பெருக்கைத் தடுக்க தமிழ்நாடு அரசும், சென்னை புறநகர் மாநகராட்சியும் புயல் வடிகால் மற்றும் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளை செய்து வருகின்றன "மேலும் எண்ணூரில் கொசஸ்தலையாறு மற்றும் சேப்பாக்கத்தில் கூவம் ஆற்று முகத்து வாரத்தின் நிலையான நீர் திறப்பு பணிகள் ரூ.226.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு வடசென்னை வெள்ள அபாயத்தைப் பெருமளவு குறைக்கும். என்று எதிர் பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு துணைபுரியும் வகையில், தொடர் கள ஆய்வுகள், பங்குதாரர்களின் ஆலோசனைகள், துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. கலந்துரையாடலின் அடிப்படையில் பின்வரும் பொருத்தமான செயல்பாடுகள் பரிசீலனைக்காக முதலமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

சென்னை புறநகர் மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளின் தொகுப்பானது வட சென்னை தொகுதியில் உள்ள கொசஸ்தலையாறு மற்றும் கூவம் படுகையின் மேல் பகுதிக்கு நிவாரணம் அளிக்கும். மேல் நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதை ஒட்டிய தாழ்வான பகுதிக்கு இந்த விரைவான வெள்ளப் பாய்ச்சலைக் கையாள்வது எதிர்காலத்தில் எழும் சவாலாக இருக்கும். தணிகாசலம் வாய்க்கால், கொடுங்கையூர் வாய்க்கால், கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்ற அனைத்து வட சென்னை வடிகால்களும் பக்கிங்ஹாம் கால்வாயில் வடிந்து எண்ணூர் மற்றும் கூவம் கடல் முகத்துவாரம் வழியாக கடலுக்குச் செல்ல வேண்டும் என்பதே இதற்கு முக்கியக் காரணம். மழை நீரை மழைநீர் வடிகால் மற்றும் மேக்ரோ வடிகால் மூலம் விரைவாக அகற்றுவது, ரீசார்ஜ் குறைவதற்கும், நிலத்தடி நீர் குறைவதற்கும் மற்றும் வறட்சி காலங்களில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும்.

இத்தருணத்தில், நகரமயமாக்கல் மற்றும் மேல் நீர்ப்பிடிப்பு பகுதியில் புயல் வடிகால் வலையமைப்புகளின் நவீனமயமாக்கல் காரணமாக பக்கிங்ஹாம் கால்வாயில் நுழையும் திடீர் வெள்ளத்தைக் கையாள; பக்கிங்ஹாம் கால்வாயை மற்றும் கரையோரப் பகுதிகளை ஒட்டியுள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்க, போர்க்கால அடிப்படையில் பக்கிங்ஹாம் கால்வாயை நவீனப்படுத்துவது மிகவும் அவசியமானது மற்றும் அதி முக்கிய மானதுமாகும். சென்னை நதி மறுசீரமைப்பு அறக்கட்டளையுடன் நீர்வளத் துறையும் சேர்ந்து, சென்னை நகரப் பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயை முழுவதையும் ஒரு விரிவான மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்கி வருகிறது, இதில் வடசென்னை திட்டத்தின் கீழ் வட சென்னையின் அதிக மக்கள் அடர்த்தி, நிலப்பரப்பு வரம்புகள் மற்றும் வடிகால் முறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முதன்மையாக செயல்படுத்தப்பட வேண்டும். கலந்துரையாடல் மற்றும் கள ஆய்வின் போது, நீர்வளத்துறை இன்ஜினியர்கள் முதல் கட்ட மறுசீரமைப்பு பின்வரும் கூறுகளை உள்ளடக்கியதாக வடக்கு பி' கால்வாய்க்கு ரூ. 68.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சங்கிலி இணைப்பு வேலி!**

கடல் மட்டத்திலிருந்து 1மீட்டர் வரை அமைந்துள்ள பகுதியில் சேறு மற்றும் குப்பைகளை அகற்றுதல் திடக்கழிவுகளை அகற்றுதல், சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயை குப்பைத் தொட்டியை வைப்பது பாதிக்கப்படக்கூடிய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் தடுப்பு சுவர் அமைப்பது போன்ற திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

நீர்வளத்துறை பக்கிங்ஹாம் கால்வாயை புனரமைக்க ரூ 1032 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்டத்தை வழங்கியுள்ளது இதில் திட்டத்தினால் பாதிக்கப்படும் 4453 குடும்பங்களுக்கு மறு குடி அமர்வு செய்வதற்கான திட்டத்தை உள்ளடக்கி உள்ளது இதனை செயல்படுத்த அதிக நேரம் எடுக்கும். எனவே சிஆர்ஆர்டி நிதியுதவியின் கீழ் வெள்ளம் தாங்கும் திறனை அதிகரிப்பதற்காக ரூ.68.17 கோடி செலவில் (கட்டம்1) முதன்மையான பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பக்கிங்ஹாம் கால்வாயை zero படுக்கை சாய்வு கால்வாயாக இருப்பதால், வடசென்னையின் பக்கிங்ஹாம் கால்வாயை மற்றும் கடலோரப் பகுதியில் உள்ள நகர்ப்புற வெள்ளத்தைத் தவிர்க்க உடனடியாக அகற்றப்பட வேண்டிய சேறு, வண்டல் மற்றும் குப்பைகள் அகற்றபடாததின் காரணமாக அதன் வெள்ளம் தாங்கும் திறன் குறைவாக உள்ளது. பக்கிங்ஹாம் கால்வாயை இருந்து கடலுக்கு நேராக நான்கு வெள்ள கேரியர்களை வழங்குவதன் மூலம் நீண்ட கால வெள்ள நிவாரணத்திற்கான நீர்வளத்துறை முன்மொழிவை விரைவுபடுத்த வேண்டும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இது சம்பந்தமாகத் தேவையானதைச் செய்து, பக்கிங்ஹாம் கால்வாயில் உடனடியாக வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன், மேலும் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த வெள்ளம் மற்றும் வறட்சியை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு தக்க ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் குறிப்பாக வடசென்னை பகுதிகளில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த சென்னை நகரத்திற்கான மேலாண்மை திட்டத்தை வலியுறுத்துகிறேன். தங்களின் நேர்மறையான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையம் முன்னாள் ஒன்றிய கழக செயலாளரும். ஒன்றியக் குழு தலைவருமான ஆசைதம்பி அவர்கள் இயற்கை எய்தினார். இதையொட்டி அன்னாரின் உடலுக்கு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர். இரா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

## புதுக்கோட்டை மாவட்டம்

# கறம்பக்குடி அரசு மருத்துவமனையில் ஆய்வு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

புதுக்கோட்டை, நவ.17-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (15.11.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, மருத்துவத்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கறம்பக்குடி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கறம்பக்குடி அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்து 36 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனையாக கடந்த 2015ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் 3 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 3 மருத்துவர்கள் பணியில் உள்ள நிலையில் ஒரு மருத்துவர் கூடுதலாக மாற்றுப் பணியில் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 5 செவிலியர் பணியிடங்கள் உள்ள நிலையில் ஒரு தலைமை செவிலியர் பணியிடம் காலியாக உள்ளது. நாள்தோறும் சராசரியாக 450 புறநோயாளிகளும், 14 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு பணி நிலையில் உள்ள மருத்துவர்களுடன் மற்ற மருத்துவமனைகளில் இருந்து மேலும் 02 மருத்துவர்கள் மாற்றுப் பணியில் பணியமர்த்தப்பட்டு 06 மருத்துவர்களுடன் 24 மணி நேரமும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இம் மருத்துவமனையில் படுக்கை வசதியுடன் கூடுதல் கட்டடம் வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாயும், மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 2 கோடி ரூபாயும் பெறப்பட்டு 50 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடப்பிரிவு ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் மருத்துவர்கள், பணியாளர்களின் காலிபணியிடங்களை நிரப்புவதற்கும், அவர்களுக்கான தங்குமிடம் கட்டுவதற்கும் நிதிநிலை அறிக்கையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பிணவறை கட்டுவதற்கான இடத்தினை தயார் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய நுண்கதிர் கருவி, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் கருவி, சிடி ஸ்கேன் கருவி tnmsc மூலம் பெற்று வழங்கப்படும். மேலும் நிரந்தரப்பணி யிடங்கள் 3 மாத காலத்திற்குள் தோற்றுவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்படும். இதன்மூலம் இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் மரு. சண்முககனி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மாலா ராஜேந்திரதுரை, கறம்பக்குடி பேரூராட்சித்தலைவர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமை! திருவாரூர் மாவட்ட முன்னாள் செயலாளர்

# பூண்டி கே.கலைச்செல்வம் நினைவுநாள் அமைதி ஊர்வலம்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், நவ.17-

திருவாரூர் மாவட்ட முன்னாள் செயலாளரும் மனித நேய பண்பாளருமான மறைந்த பூண்டி கே. கலைச்செல்வம் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (17.11.2023) அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி கொரடாச்சேரியில் அமைதி ஊர்வலமும் , நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்வும் நடைபெறுகிறது.

திருவாரூர் மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று நடைபெறுகிறது. மாவட்டம் முழுதும் நடைபெறும் இந்த நிகழ்வை முன்னிட்டு அவரது சொந்த ஊரான கொரடாச்சேரியில் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் அமைதி ஊர்வலம், வெட்டாற்று பாலத்தில் இருந்து புறப்படுகிறது. மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் அனைத்து கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்கின்றனர்.

அதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ தலைமையிலும் . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் முன்னிலையிலும் நடைபெறும் மாபெரும் இரத்த தான முகாமை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கி வைக்கிறார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களை மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் நினைவாக சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் வழங்குகிறார்.

பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவ மாணவிகளுக்கு மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் நினைவாக தங்க நாணயங்களை தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் வழங்குகின்றனர்.

புனித சவேரியார் பள்ளி மாணவியர்களுக்கு உடைகள் மற்றும் நோட்டு புத்தகங்களை மாவட்ட அவைத் தலைவர் க.தன்ராஜ் மறைந்த பூண்டி.கே.கலைச்செல்வம் அவர்களின் நினைவாக வழங்குகிறார். வாகன முகப்பு விளக்கு வில்லைகள் ஒட்டும் நிகழ்வை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார் ஒட்டி துவக்கி வைக்கிறார். அரசு மருத்துவமனை உள் நோயாளிகளுக்கு மதிய உணவினை நாகை மாவட்டச் செயலாளர் என்.கவுதமன் வழங்குகிறார்.

மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மறைந்த பூண்டி . கலைச்செல்வம் அவர்களின் நினைவாக மரக்கன்றுகளை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மீனாட்சி சூர்யா பிரகாஷ் நடுகிறார். பின்னர் பாரதி ஆதரவற்றோர் பெண்கள் மேம்பாட்டு மையத்தில் உணவு மற்றும் ஆடைகளை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை. எஸ்.அசோகன் வழங்க, ராமகிருஷ்ணா சேவா முதியோர் இல்லத்திற்கு மறைந்த பூண்டி.கே.கலைச் செல்வம் அவர்களின் நினைவாக மதிய உணவினை நகர் மன்ற உறுப்பினரும் பொதுக்குழு உறுப்பினருமான் டி.செந்தில் வழங்குகிறார்.

இந்த நிகழ்வுகளை திருவாரூர் மாவட்ட தி.மு. கழகம் சார்பில் மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன், கொரடாச்சேரி பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் இணைந்து ஒருங்கிணைத்து நடத்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூண்டி கே. கலைச்செல்வன்

**நவம்பர் 17 (2007)**



**திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**மாவட்டத்தின் கழகத் தோழர்களுக்கெல்லாம் தோன்றாத் துணையாக விளங்கி, திருவாரூர் மாவட்டத்தில் கழகம் மேன்மேலும் பீடுநடை போட தளர்விலாது பணியாற்றியவர். கொடியோர் சிலரால் படுகொலைக்கு ஆளானார்.**

**"சுழன்று சுழன்று கழகப் பணியாற்றி வந்த காளை" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். பரிசளிப்பு விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்வில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாநில மாநில மாணவர் அணி துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன், புதுக்கோட்டை விஜயா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (15.11.2023) புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.67.83 கோடி செலவில் புதிய அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடம் மற்றும் பொது சுகாதாரத்துறையின்கீழ் ரூ.8.89 கோடி செலவில் 27 புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்கள். புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் கலந்துகொண்டார்கள். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில், நேற்று (16.11.2023) கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட, சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை 3) மற்றும் தட்டச்சு பணிக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால், கூட்டுறவு சங்க பதிவாளர் டாக்டர். ந. சுப்பையன் ஆகியோர் உள்ளனர்.

### மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை!

# நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பேச்சு - கட்டுரைப் போட்டி!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பரிசு வழங்கினார்!

நாமக்கல், நவ. 17-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாநில அளவிலான பள்ளி -கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி நாமக்கல் மேற்கு மாவட்டம் மாணிக்கம்பாளையம் மேட்டுப்புதூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்.பாலசுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட துணைச் செயலாளர் சாந்தி, எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எம்.தங்கவேல், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஐயப்பன் (எ) பெருமாள், எஸ்.தங்கமணி, பி.என்.ராக்கேஸ்கண்ணன், எஸ்.ஸ்ரீமதன் யூ.லாவண்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், மாநில மாணவரணி இணை செயலாளர் தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினர்.

போட்டியின் நடுவர்களாக மு.நடராஜ், கு.பெரியசாமி, ஆறுமுகம், ரங்கராஜ், சுப்பிரமணி, கந்தசாமி, நடேசன், சுப்பிரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான போட்டியில் கட்டுரை போட்டிக்கு 'வள்ளுவம் போற்றிய கலைஞர்', 'திராவிடத்தின் எழுச்சி கலைஞர்', 'இந்திய ஜனநாயகத்தில் கலைஞரின் பங்கு' ஆகிய தலைப்புகளிலும் கட்டுரை போட்டியும், 'நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர்', 'மகளிர் மாண்பு காத்த கலைஞர்','கலைஞரும் சுயமரியாதையும்' என்ற தலைப்புகளில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை போட்டியில் பள்ளி அளவில் 180 மாணவ,மாணவிகளும் கட்டுரைப் போட்டியில் 69 மாணவ மாணவிகளும் பங்கேற்றனர் அதேபோல் பேச்சுப் போட்டியில் பள்ளி அளவில் 70 மாணவ, மாணவிகளும், கல்லூரி அளவில் 30 மாணவ, மாணவிகளும் என 400 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசு பதக்கங்கள் வழங்கப்பட்டது மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகையுடன் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது.

### சேலம் இளைஞர் அணி மாநாட்டில்

# பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து பெருமளவில் பங்கேற்போம்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

பெரம்பலூர்,நவ,17-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன்,

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அன்னியூர் சிவா, குன்னம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் செ.வல்லபன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி. முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார்,வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணைத் தலைவர் எம்.ரெங்கராஜ்,அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா,உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அனைத்து கிளைகளிலும் சிறப்பாக கொண்டாடுவது எனவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27 அன்று மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது எனவும்,

வாக்காளர் பட்டியலில், புதிய வாக்காளர்கள் சேர்த்தல் குறித்து நடைபெறும் முகாமில் BLA2, முகவர்கள் கலந்து கொண்டு புதிய வாக்காளர்கள் நிறைய பேரை சேர்க்க வேண்டும் எனவும்,

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றியங்களில் உள்ள வாக்குச்சாவடி பணியாளர்கள் BLC சிறப்புக்கூட்டம் நடத்தி தயார்படுத்த வேண்டும் என்று நிர்வாகிகளையும் இந்தச் செயற்குழு கூட்டம் கேட்டுக்கொள்கிறது எனவும்,

வருகிற டிசம்பர் 17 அன்று சேலம் மாவட்டத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து அனைத்து கிளைகளிலும் இருந்து திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது எனவும்,


மகளிர் அணிக்கு அதிகளவில் உறுப்பினர்கள் சேர்த்து தலைமையிடம் வழங்க வேண்டும் என்று நிர்வாகிகளை இந்தச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது எனவும்,ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சோமு.மதியழகன் மறைவிற்கும், பெரம்பலூர் ஒன்றிய முன்னாள் துணைச் செயலாளர் சங்கு சுந்தர்ராஜ் மனைவி மறைவிற்கும், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன் தாயார் பொன்னி மாரியாயி மறைவிற்கும்,

பெரம்பலூர் நகர 19 வது வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன் தந்தை மறைவிற்கும், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், மாவட்ட பிரதிநிதி முருகேசன் தாயார் நல்லம்மாள் மறைவிற்கும், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் தங்கமணி தாயார் கல்யாணி மறைவிற்கும்,

ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், தென்னவன் அறிவேந்தி தாயாரும், கூடலூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மறைவிற்கும், ஆலத்தூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் பேரையூர் ராஜி மனைவி வேம்பு மறைவிற்கும்,

அருமடல் முன்னாள் கிளைச் செயலாளர் பழனிமுத்து மறைவிற்கும்,

நாவலூர் கிளைச் செயலாளர் சுப்பிரமணி மறைவிற்கும், பெரம்பலூர் மாவட்ட பிரதிநிதி பிரபு தாயார் லெட்சுமி மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பாளை பி.பி.எல். திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.உடன் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,மேயர் சரவணன்,துணைமேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்,தர்மன்,கிரிஜாகுமார், பொருளாளர் வண்ணை சேகர் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டையில் புதிய பல் மருத்துவக் கல்லூரி திறப்பு விழா!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ. 17-

புதுக்கோட்டையில் தமிழ்நாடு அரசால் 67.83 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாட்டின் இரண்டாவது அரசு பல் மருத்துவக் கல்லூரியை தமிழ்நாடு முதலமைச்சர் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 8.89 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத் துறை கட்டடங்களையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிலையில் புதுக்கோட்டையில் புதிதாக திறக்கப்பட்ட பல் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன், திமுக மாநிலங்களவை உறுப்பினர் எம்எம் அப்துல்லா, இராமநாதபுரம் எம்பி நவாஸ்கனி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் வை. முத்துராஜா, சின்னதுரை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

அப்போது இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில்:

தமிழ்நாடு அரசின் சுகாதாரத்துறை கடந்த 11 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது 556ஐ வாங்கி உள்ளது. அதில் குறிப்பாக கடந்த ஆண்டும் முந்தைய ஆண்டும் 487 விருதுகளை பெற்றுள்ளோம், மீதமுள்ள விருது மட்டும் தான் அ.தி.மு.க. ஆட்சிகாலத்தில் சுகாதாரத்துறை வாங்கியுள்ளது, இதிலிருந்து அ.தி.மு.க.ஆட்சியில் சுகாதாரத்துறை எந்த அளவுக்கு சுகாதாரமாக இருந்தது என்பதை பார்த்துக்கொள்ளுங்கள்,

அதே போல் கடந்த ஆறு ஆண்டுகளில் ஒன்றிய அரசின் லட்சயா விருதை தமிழ்நாடு அரசின் சுகாதாரத்துறை 79ஐ பெற்றுள்ளது, அதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 விருதுகளை பெற்றுள்ளோம், இதிலிருந்து அ.தி.மு.க. ஆட்சியில் சுகாதாரத்துறை இருந்த லட்சணம் தெரிகிறது.

தமிழ்நாட்டில் 1021 மருத்துவர்கள், 983 மருந்தாளுநர்கள், 1066 சுகாதார ஊழியர்கள், 2022 கிராமப்புற செவிலியர்கள் காலி பணியிடங்கள் உள்ளன. இந்த பணியிடங்களை பொறுத்தவரை 30க்கும் மேற்பட்ட வழக்குகள் இருந்தன. தற்போது அது முடிவுக்கு வந்து தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்துள்ளனர். வருகின்ற ஒரு வாரத்தில் நல்ல தீர்ப்பு அரசுக்கு சாதகமாக வரும் என்று எண்ணுகிறோம் அவ்வாறு வந்தவுடன் 20 நாட்களுக்குள் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுகையில்,அ.தி.மு.க.ஆட்சிக் காலத்தில் 120 மருத்துவமனைகள் எச்ஆர் என்ற மருத்துவ பணிகள் உருவாக்காமல் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அப்படி தரம் உயர்த்தினால் தரம் உயர்த்தியதற்கு அர்த்தம் அல்ல பெயர்ப்பலகை மட்டுமே மாட்டிக்கொள்ள முடியும், ஆனால் மருத்துவமனை தரம் உயர்த்தி விட்டோம். இரண்டரை ஆண்டு காலமாக மருத்துவர்களை தற்போதைய ஆட்சியாளர்கள் நியமிக்கவில்லை என்ற தவறான தகவலை முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் சொல்லி வருகிறார். அதுபோல தான் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் உள்ள அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி விட்டு மருத்துவர்களை நியமிக்காமல் விட்டுவிட்டார். இந்நிலையில்தான் அந்த மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமிக்க வேண்டும் என அப்பகுதியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இது எங்கள் கவனத்திற்கு வந்த பிறகு தற்போது அங்கு மருத்துவ பணியிடத்தை உருவாக்கி மருத்துவர்கள் நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டி.என்.பி.எஸ்.சி.யில் 10,250 பணியிடங்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்ட நிலையில் மருத்துவத் துறையில் காலியாக இருந்த டைப்பிஸ்ட் ஒஏ உள்ளிட்ட 986 பணியிடங்கள் நிரப்பப்பட்டு அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பணி நியமன ஆணை வழங்கி நியமிக்கப்பட்டார்கள். மருத்துவத்துறையில் தொடர்ந்து காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எம்.ஆர்.பி. மூலம் மருத்துவத்துறையில் காலி பணியிடங்கள் நிரப்பும் விவகாரத்தில் 30க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டதால் தற்பொழுது அந்த வழக்குகள் முடிவுக்கு வந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஓரிரு தினத்திலோ அல்லது ஒரு வார காலத்திலோ அரசுக்கு சாதகமாக தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கின்றோம். அப்படி வந்துவிட்டால் உடனடியாக காலி பணியிடங்கள் நிரப்பப்படும். சென்னை மாநகராட்சி ஆணையரின் உதவியாளர் காயமடைந்த விவகாரத்தில் முன்னாள் முதலமைச்சர் என்னவென்று தெரியாமல் பேசுகிறார். எதையும் தெரிந்து கொள்ளளாமல் அறிக்கை விடுவது வருத்தத்துக்குரியது. எதிர்க்கட்சி தலைவர் என்பது பொறுப்பான பொறுப்பு. ஆனால் அவர் இது போன்று செயல்படுவது அவரின் அறியாமையையும் நிர்வாக திறமையின்மையையும் காட்டுகிறது.

காரில் சென்னைக்கும் சேலத்திற்கும் செல்லும் எடப்பாடி பழனிச்சாமி செல்லும் வழியில் உள்ள சுகாதார நிலையங்களுக்குச் சென்று பாம்புக் கடி நாய்க் கடி மருந்துகள் இருக்கிறதா? அது எவ்வளவு நாட்கள் இருக்கிறது என்று கேட்டு தெரிந்து கொண்டு தமிழ்நாட்டின் சுகாதாரத்துறை வளர்ச்சியைப் பற்றி தெரிந்து கொள்ளட்டும். போலி மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் கூட மூன்று மருத்துவமனைகள் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது. போலி மருத்துவர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று கவனத்திற்கு வரும் போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தின் சார்பில்

# விபத்தில் மரணமடைந்த ஓட்டுநர் விஜய் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம் நிதி!

### துணைவியாருக்கு பணி நியமன ஆணையினை மு.சண்முகம் எம்.பி. வழங்கினார்!

தஞ்சை, நவ.17-


தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்படும் தமிழ்நாடு மோட்டார் வாகன ஓட்டுனர் தொ.மு.ச. உறுப்பினரும் டாக்ஸி ஓட்டுநருமான விஜய் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தார். அவருக்கு தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பாக விபத்து உதவித் தொகையாக ரூபாய் 2 லட்சமும், அவரது ஈமச்சடங்கிற்காக ரூபாய் ஐந்தாயிரமும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அவரது துணைவியார் திவ்யாவிடம் வழங்கப்பட்டது. துணைவியாருக்கு பணிநியமன ஆணையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான மு.சண்முகம் எம்.பி., தஞ்சாவூர் மாநகர மேயர் சண்.ராமநாதன், தஞ்சாவூர் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சேவியர், மா.அருணகிரிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மேயர் சண்.ராமநாதனுக்கு தொழிலாளர்கள் சார்பில் நன்றி!**

இந்நிகழ்ச்சியின்போது தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. நகர மேயர் சண்.ராமநாதனிடம் வாழ்க்கை துணையை இழந்து வறுமையில் வாடும் அவரது துணைவியாருக்கு உதவிட வேண்டும் என வைத்த வேண்டுகோளை யேற்று, மாநகர மேயர் சண்.ராமநாதன் மாநகராட்சியில் அவரது துணைவியாருக்கு பணி வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார். அதன் அடிப்படையில் மாநகராட்சி மேயர் அப்பெண்மணிக்கு மாநகராட்சியில் பணி வழங்கி அதற்கான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் சார்பாகவும், தமிழ்நாடு மோட்டார் வாகன தொ.மு.ச. சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றி யினை மேயர் சண்.ராமநாதனுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு நெல்லை டவுன் கல்லணை மாநகராட்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில் மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு பங்கேற்று இயற்கை வளங்களை பாதுகாக்கும் வகையில் மாணவிகளுக்கு அகத்தி, வேப்பமரம் போன்ற மரவிதைகள் பொருத்தி பேப்பரில் செய்யப்பட்ட பேனாக்களை 2800 மாணவிகளுக்கு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் அனார்கலி சுபஹானி,பகுதி துணைச் செயலாளர் அப்துல் சுபஹானி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு உலக முதலீட்டாளர் மாநாடு 2024 குறித்த மாவட்ட பெருந்திரள் கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க..பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டக் கழகப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைத் தலைவர் ஷீலாஸதேவி சேரன், நகர மன்றத் தலைவர் ச.தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தென்காசி சாலையில், இராஜபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் புதிய பகுதி அலுவலகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் மற்றும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

### தி.மு.க. சட்டத்துறை சார்பில் தமிழினத் தலைவர்

# “கலைஞர் நூற்றாண்டு விழா”வினையொட்டி 5வது மண்டல பேச்சுப் போட்டி!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ. 17 -

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா” வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும் என்று கழக சட்டத் துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு

1.கலைஞரின் பார்வையில் சமூக நீதி மாணவர்கள்

2.கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி - இளம்வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்டக் கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்த தற்போது5வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும்

முதல் பரிசு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்,

மூன்றாம் பரிசு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/ வெண்கலப் பதக்கம், சான்றிதழ். வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) “மாநில அளவிலான இறுதிப் போட்டி” நீலாங்கரை, “ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்” நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்குமுன்புகீழே குறிப்பிடப்பட்டுள்ள “பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்” ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/ தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 50,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/ தாமிரப்பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்**

கே.எஸ்.இரவிச்சந்திரன் (சட்டத்துறைஇணைச்செயலாளர்) - 9840022250,

ஜெ.பச்சையப்பன் (சட்டத்துறை துணைச் செயலாளர்)- 9840260178

கே.சந்துரு (சட்டத் துறை துணைச் செயலாளர் )- 9444006999, கே.ஜே.சரவணன் (தலைமைக் கழக வழக்கறிஞர் ) - 9841057345

**5வது மண்டல பேச்சுப்போட்டி**

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள், போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்

**19 - 11 - 2023 - மாணவர்கள்**

1. டாக்டர்.அம்பேத்கர் அரசுசட்டப்பல்கலைக்கழக வளாகத்தில்உள்ளஅரங்கம், பெருங்குடி, தரமணிரயில்நிலையம்அருகில், சென்னை 113 , 2. அரசுசட்டக்கல்லூரி, விழுப்புரம், 3. சரஸ்வதிசட்டக்கல்லூரி, திண்டிவனம் (தனியார்)

4. பாரத்பல்கலைக்கழகம், சேலையூர், சென்னை.

5.செட்டிநாடுஅகெடமி ஆப்ரிசர்ச்&எஜிகேசன், கேளம்பாக்கம், சென்னை.

6. ஹிந்துஸ்தான் இன்ஸ்ட்டியூட்ஆப்டெக்னாலஜி&சயின்ஸ், சென்னை

7.சத்தியபாமாஇன்ஸ்ட்டியூட்ஆப்சயின்ஸ்&டெக்னாலஜிபல்கலைக்கழகம், ஜேப்பியார்நகர், சென்னை.

8.எஸ்ஆர்எம்பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர், காஞ்சிபுரம்

9.வேல்ஸ்இன்ஸ்ட்டியூட் ஆப்சயின்ஸ், டெக்னாலஜி&அட்வான்ஸ்டுஸ்டடிஸ் (விஸ்டாஸ்), வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை.

10.வி.ஐ.டி. பல்கலைக்கழகம், வேலூர் (சென்னைவளாகம்) 11. டாக்டர்.அம்பேத்கர்அரசுசட்டக்கல்லூரி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்.

**18.11.2023 - (வழக்கறிஞர்கள்)**

இடம் ஓட்டல் ரமடா, எம்.எம்.டி.ஏ. அலுவலகம் அருகில், எழும்பூர்,

தகுதி: விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நெற்பயிர் காப்பீட்டிற்கான கால வரம்பு நீட்டிப்பு!

## வேளாண் - உழவர் நலத் துறை அறிவிப்பு!

சென்னை, நவ.17-

விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க நடப்பு 2023-2024ஆம் ஆண்டில், சம்பா நெற்பயிர் காப்பீட்டிற்கான காலவரம்பு 22.11.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது வரை சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்யாத விவசாயிகள் காப்பீடு செய்ய வேண்டுமென வேளாண் - உழவர் நலத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

சம்பா/தாளடி/பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக் கிணங்க, விடுபட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட தொடர்முயற்சியால் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 22.11.2023 வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே, சனி (18.11.2023) மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் (19.11.2023) பொது சேவை மையங்கள் செயல்படுவதால் அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணா மலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நவம்பர் 22ஆம் தேதிக்குள் இது வரை சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. நிர்ணயம் செய்யப்பட்ட காலக்கெடுவுக்குள் ஏற்கெனவே பதிவு செய்த விவசாயிகள் மீண்டும் பதிவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### கோவை கவுண்டம்பாளையத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கைத்தறி விற்பனை - வர்த்தக கண்காட்சி!

## நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் - மேற்கு மண்டல நெசவாளர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, நவ. 17 -

தி.மு.கழக நெசவாளர் அணி - மேற்கு மண்டலத்திற்குட்பட்ட திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தி, தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, தலைவர், துணைத்தலைவர் மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 15.11.2023 புதன்கிழமை அன்று திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் துணைச் செயலாளர் எஸ்.எல்.டி.சச்சிதானந்தம் வரவேற்புரையில் துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், செயலாளர்கள் க.பழனி சாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சா.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், துணை செயலாளர்கள் வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், சி.வி. மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கே.எம்.நாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :-

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கோவை கவுண்டன் பாளையத்தில் 20.11.2023 அன்று கைத்தறி விற்பனை மற்றும் வர்த்தக கண்காட்சியினை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக கொண்டாடுவது என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தின் இறுதியில் திருப்பூர் தெற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கே.எஸ்.பி.ராஜேந்திரன் நன்றியுரையாற்றினார்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - செ.இராமலிங்கம் எம்.பி. - பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் மழை வெள்ளப் பாதிப்பு!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் ஆய்வு!

நாகை, நவ.17-

மயிலாடுதுறை மாவட்டத்தில் கனமழை பெய்து வருவதையொட்டி, தரங்கம்பாடியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மழை பாதிப்புகள் குறித்து குடியிருப்பு வீடுகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

பின்னர் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் தலைச்சங்காடு நெடுஞ்சாலை பணிகள் நடைபெறுவதையொட்டி மாற்றுச்சாலை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை ஆய்வு செய்து, பணிகளை துரிதமாக மேற்கொள்ள நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களிடம் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து தலைச்சங்காடு கிராமத்தில் காளியம்மன்கோவில் தெரு மற்றும் நேரு தெரு ஆகிய பகுதிகளில் மழை பாதிப்புகள் ஏதேனும் உள்ளனவா எனவும், குடியிருப்பு வீடுகளுக்குச் சென்று நேரடியாக பார்வையிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

பின்னர் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் காத்திருப்பு கிராமம் தெற்கு அஞ்சாமனை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கனகராஜ் (வயது48) எதிர்பாராதவிதமாக உயிரிழந்தமையால், அவரின் வாரிசுதாரருக்கு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் நிவாரண நிதியாக ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி ஆறுதல் கூறினார்.

அமைச்சர் மழை பாதிப்புகளை ஆய்வின்போது மயிலாடுதுறை மாவட்டக் கழச் செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் வே.அமுதவல்லி, மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர் பஞ்ச் குமார், ஞான. இமயநாதன், என். இளையபெருமாள், பா.முருகமணி, பி.எம்.அன்பழகன், எம் . அப்துல் மாலிக், தரங்கம்பாடி பேரூர்க் கழகச் செயலாளர் முத்துராஜா, மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர பேரூர் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தென்காசி வடக்கு மாவட்டத்தில்

# ஓ.பி.எஸ். அணியினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா முன்னிலையில்!

தென்காசி, நவ. 17-

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் தலைமையை ஏற்றும் கழக அரசின் சாதனைகளை கருத்தில் கொண்டும் தென்காசி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் ஓ.பி.எஸ். அணியினர் 50க்கும் மேற்பட்டோர் தாமாக முன்வந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன் கோவில் தொகுதி குருவிகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஓ.பி.எஸ். அணியினர் மூர்த்தி, சரண், செல்வம், முத்துராஜ், ராசு, கார்த்தி, மணிகண்டன், ராஜா, இசக்கி பாண்டியன், ஜெயகோடி, கார்த்திக், கிருஷ்ணசாமி, வெள்ளத்துரை, சங்கர பாண்டியன், பிரகாஷ், சங்கர், மகாராஜன் உள்பட 50க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. வரவேற்று கழக இருவண்ண சால்வை அணிவித்தார் .

நிகழ்வில் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை,நகர துணைச் செயலாளர் சுப்புத்தாய், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் முகேஷ், முத்துக்குமார் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்டம் - மாமன்ற உறுப்பினர்

# தி.சந்தோஷ்குமார் - மகள் காஜல் விபத்தில் பலி!

## மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் - கழகத்தினர் அஞ்சலி!

கோவை, நவ. 17-

கோவை தெற்கு மாவட்டம்,மதுக்கரை ஒன்றியம்,செட்டிப்பாளையம் பேரூராட்சி 10 வது வார்டு கிளை கழக செயலாளரும்,பேரூராட்சி மாமன்ற உறுப்பினருமான தி.சந்தோஷ்குமார், அவரது மனைவி இந்துமதி மற்றும் அவர்களது மகள் காஜல் மூவரும் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த போது திருப்பூர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை பெருமாநல்லூர் அருகில் நேர்ந்த சாலை விபத்தில் சிக்கினர். இவ்விடத்தில் சந்தோஷ்குமார், மகள் காஜல் இருவரும் சம்பவ இடத்திலேயே மறைவெய்தினர்.

சந்தோஷ்குமாரின் மனைவி இந்துமதி ஆபத்தான நிலையில் கோவை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்தில் மறைந்த செட்டிப்பாளையம் 10 வது வார்டு மன்ற உறுப்பினர் சந்தோஷ்குமார் மற்றும் மகள் காஜல் இருவருக்கும் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், செட்டிப்பாளையம் பேரூராட்சி தலைவர், செயலாளர், மன்ற உறுப்பினர்கள், பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

# வாக்காளர் சிறப்பு முகாம் தேதி மாற்றம்!

சென்னை, நவ.17–

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, தமிழ்நாடு முழுவதும் வரும் நவம்பர் 18 மற்றும் 19ஆம் தேதிகளில் நடக்கவிருந்த வாக்காளர் சிறப்பு முகாம் வேறு தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியானது அக்டோபர் 27ஆம் தேதி தொடங்கப்பட்டு, டிசம்பர் மாதம் 9ஆம் தேதி வரை நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்றம் செய்ய 04.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் தீபாவளியை முன்னிட்டு, 13.11.2023 அன்று தமிழ்நாடு அரசு பொது விடுமுறையாகவும், அதற்கு பதிலாக வரும் 18.11.2023 அன்று பணி நாளாகவும் அறிவித்தது. இதனால் வரும் 18.11.2023 மற்றும் 19.11.2023 ஆகிய நாட்களில் நடக்கவிருந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் 25.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 26.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய தேதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### நெல்லை மாநகராட்சி மேயர்

# பி.எம்.சரவணன் தந்தை மாரியப்ப பிள்ளை மறைவு!

## முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 17 -

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணனின் தந்தை பி.பி.மாரியப்பபிள்ளையின் மறைவுச் செய்தி அறிந்து முதல்வரும் - கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணனின் தந்தை பி.பி மாரியப்பபிள்ளை அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் மேயர் சரவணன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் வைத்து தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் குருவிகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஓ.பி.எஸ். அணியினர் மூர்த்தி, சரண் செல்வம், கார்த்தி உள்பட 50க்கும் மேற்பட்டோர் அந்த அணியிலிருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை, நகர துணைச் செயலாளர் சுப்புத்தாய், முத்துக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ் உள்பட பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (15.11.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்" என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் நீர்வளத்துறை அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குழுவின் இணைத் தலைவரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சருமான அர. சக்கரபாணி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரும் உறுப்பினர் செயலருமான முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத்துறை கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, குழு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ்.குமரி, வே.மதிமாறன், சுந்தர ஆவுடையப்பன், முதன்மை தலைமைப்பொறியாளர் கு.அசோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கேரள மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவிடம் சீரமைக்கும் பணிகளை, நேற்று முன்தினம் (15.11.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, கோவை மண்டலத் தலைமைப் பொறியாளர் காசிலிங்கம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வரின் சீரிய நடவடிக்கையால் - கடந்த 9 மாதங்களில்

# தமிழ்நாட்டுக்கு 21.37 கோடி சுற்றுலா பயணிகள் வருகை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் தகவல்!

சென்னை, நவ.17-

தமிழ்நாட்டிற்கு 2023 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் 8,64,133 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், 21,37,71,093 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் - என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் செப்டம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் 8,64,133 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் செப்டம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் 21,37,71,093 என உயர்ந்துள்ளது.

**பூம்புகார் அலைக்கூடம் புனரமைப்பு!**

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியா குமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத் தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடு படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான ஒளிரும் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**குற்றாலத்தில் நவீன வசதிகள்!**

'தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப் படுத்தும் பணிகளும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், தூத்துக்குடி கடற்கரையை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுக்கள் மற்றும் கடற்கரை விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும்.

இவ்வாறு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

### கேரள மாநிலம் வைக்கத்தில்

# தந்தை பெரியார் நினைவிடத்தில் சீரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, நவ.17-

கேரளா மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவிடம் சீரமைக்கும் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆய்வு செய்தார்.

கேரளா மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தை சீரமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் 30.3.2023 அன்று அறிவித்தார்கள். பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பலமுறை கேரளா, வைக்கம் சென்று சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்து வந்தார்கள். நேற்று முன்தினம் (15.11.2023) வைக்கம் சென்று, சீரமைப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

**நவ 30-க்குள் முடிவடையும்!**

தந்தை பெரியாரின் நினைவிடம் தரைதளம் மற்றும் முதல் தளத்தை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளது. இதில், நூலகம் 2582 சதுரடி பரப்பளவிலும், அருங்காட்சியகம் 1891 சதுரடி பரப்பளவிலும் அமைந்துள்ளது. ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 28.6.2023 அன்று துவங்கப்பட்ட சீரமைப்புப் பணிகள், நவம்பர் - 30க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக, அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1891 சதுர அடியில் அமைந்திருந்த அருங்காட்சியகத்தை தரை தளம் மற்றும் முதல் தளம் 3025 சதுர அடியில் விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழைய நூலக கட்டடத்தினை அகற்றி தரைதளத்தில் புதிய நூலகம் மற்றும் முதல் தளத்தில் தங்கும் அறைகள் 3457 சதுர அடிகளில் கட்டப்பட்டு வருகின்றன.

சிறுவர் பூங்கா மற்றும் திறந்தவெளி அரங்கம் ஆகியவைகளையும் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அருங்காட்சியக பூங்கா மேம்படுத்தும் பணி சுற்றுச்ச்சுவரினை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிகளும் நுழைவு வாயில் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**பணிகளின் தரத்தினை அமைச்சர் ஆய்வு செய்தார்!**

வைக்கம், தந்தை பெரியார் நினைவிடம் சென்ற உடனே அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு பணியாக நேரில் பார்த்து ஆய்வு மேற்கொண்டார். நூலகம் மற்றும் அருங்காட்சியகம் கட்டட பூச்சு பணி மற்றும் டைல்ஸ் பதிக்கும் பணிகள் நடைபெற்றுவந்தன. சிமெண்ட் பூச்சு பணிகளின், சிமெண்ட், மணல் ஆகியவற்றின் தரத்தினை ஆய்வு செய்த அமைச்சர், டைல்ஸ் பதிக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்கள். சுற்றுச்சுவர் மற்றும் இதர பணிகளையும் ஆய்வு செய்து பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்பி.சந்திரமோகன், சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, கோவை மண்டலத் தலைமைப் பொறியாளர் காசிலிங்கம் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை! - பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை!

# நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பேச்சு, கட்டுரைப் போட்டி!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பரிசு வழங்கினார்!

நாமக்கல், நவ 17-

மாணவநேசன் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நாமக்கல் ஸ்ரீ மஹாலில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கடல்அரசன் எஸ்.கார்த்திகேயன் வரவேற்றார். துணை அமைப்பாளர்கள் ஸ்ரீ சக்திவேல், மணிகண்டன், பி.சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.சத்தியசீலன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். சிறப்புவிருந்தினராக மாநில மாணவர் அணி துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

போட்டி நடுவராக திமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாநில தி.மு.க. மகளிர் தொண்டர் அணி செயலாளர் ப.ராணி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர் ப. கைலாசம், சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் நக்கீரன், தலைமைக் கழக பேச்சாளர் ராஜகோபால், மாவட்ட அவை தலைவர் மணிமாறன், மாவட்ட துணை செயலாளர் ராணி பெரியண்ணன்,

ஒன்றிய செயலாளர்கள் கே.பி.ராமசுவாமி, வி.கே. பழனிவேல், கே.பி.ஜெகநாதன், நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், பூபதி, சிவக்குமார், நகர மன்ற தலைவர் கலாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், பெ.ந.பழநிசாமி மற்றும் திமுக நிர்வாகிகள் மற்றும் 800க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட துணை அமைப்பாளர் நா.கௌதம் ராம் நன்றி கூறினார்.

தொடர்ந்து மாலை மாணவ மாணவிகளுக்கு பரிசளிக்கும் விழா நடைபெற்றது இதில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்.

பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் களவாணி அரசு பள்ளி மாணவர் மு. மாதேஸ்வரன் முதல் பரிசையும், ராசிபுரம் தூய இருதய மேல்நிலைப் பள்ளி மாணவி சி.ஸ்வேதா இரண்டாம் பரிசையும், வெண்ணந்தூர் அரசு பெண்கள் பள்ளி பா.ரித்திகா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை போட்டியில் செல்வம் கல்லூரி மாணவர் கோ.சக்தி முதல் பரிசையும், நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை பெண்கள் கல்லூரி மாணவி காயத்ரி இரண்டாம் பரிசையும், கவிஞர் ராமலிங்கம் பிள்ளை கல்லூரி மாணவி சந்தியா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

இதேபோல் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் எருமப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் சுரேஷ் குமார் முதல் பரிசையும், நாமக்கல் அரசு பள்ளி மௌலீஸ்வரன் இரண்டாம் பரிசையும், ஸ்ரீவித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி ரா.ஹிருத்திகா மூன்றாம் பரிசையும் பெற்றனர். அதேபோல் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் திருவள்ளுவர் அரசு கல்லூரி மாணவி சரண்யா முதல் பரிசையும், அறிஞர் அண்ணா கல்லூரி மாணவர் மோகன் குமார் இரண்டாம் பரிசையும், செல்வம் கல்லூரி மாணவி சந்தியா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

# ஊடகத்தின் அடிப்படை மாண்புகளை உயர்த்திப் பிடிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - தேசிய பத்திரிகை நாள் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ. 17-

தேசிய பத்திரிகை நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியில், "சுதந்திரமான ஊடகத்தின் அடிப்படை மாண்புகளை உயர்த்திப் பிடிப்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**உண்மையான ஊடகவியலே துடிப்பான மக்களாட்சியின் கண்காணிப்பாளர்! எனவே, தேசிய பத்திரிகை நாளில், ஊடகத்தின் ஆற்றலையும் பொறுப்பையும் உணர்த்துவோம். அரசியல் அழுத்தங்களுக்கு சிலர் அடிபணியும் இக்காலத்தில், சாய்வற்ற நேர்மையான ஊடகவியலை முன்னெடுத்து, சுதந்திரமான ஊடகத்தின் அடிப்படை மாண்புகளை உயர்த்திப் பிடிப்போம்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளா.

# மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60.74 அடியாக உயர்வு!

சேலம், நவ. 17-

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு இருந்ததாலும், அணைக்கு நீர்வரத்து அதிகரித்த காரணத்தாலும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே இருக்கிறது.

இன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர் மட்டம் 60.41 அடியில் இருந்து 60.74 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு வரும் நீர்வரத்து வினாடிக்கு 3,320 கன அடியில் இருந்து 3,239 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையில் தற்போது 25.24 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது. குடிநீர் தேவைக்காக மட்டும் மேட்டூர் அணையில் இருந்து 250 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகளை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (15.11.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.தேன்மொழி, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மாலா ராஜேந்திரதுரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் காத்திருப்பு தெற்கு அஞ்சாமனை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கனகராஜ் உயிரிழந்தமையால் அவரின் குடும்பத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நிவாரண நிதியாக ரூ.1 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, ஒன்றியச் செயலாளர் பஞ்சு.குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# திராவிட சினிமா

32

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள்- உதவி -: ஞானம்





# பட்டியலின முதல் நாயகன் ‘மதுரை வீரன்’

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

திராவிட சினிமா குறித்த ஆய்வுப் பார்வையில், எம்.ஜி.ஆர் திரைப்படங்கள் ஒரு தனித்த இடம் கொண்டவை. அவை, திராவிட சினிமா வகைமைக்கு உள்ளேயும் வெளியேயும் இயங்கியவை. குறிப்பாக, 1960 களின் நடு மற்றும் பிற்பகுதியில் அவர் நடித்த திரைப்படங்கள் முற்றிலுமாக திராவிட சினிமாக்களின் கருத்தியல் மற்றும் அழகியல் தளத்துக்கு வெளியே இருப்புக் கொண்டவை.

மேற்படி காலவெளியில், அவர் நடித்த திரைப்படங்கள் பெரும்பாலும் எம்.ஜி.ஆர் எனும் நடிகரை முன்னிறுத்தியவை மட்டுமே. இந்தக் காலகட்டத்தில்தான் அவர் பெரும் எண்ணிக்கையிலான திரைப்படங்களில் நடித்தார். அவை பற்றிப் பின்னர் விரிவாகப் பேசலாம்.

1956-ஆம் ஆண்டில் டி.யோகானந்த் அவர்களின் இயக்கத்தில், லேனா செட்டியார் / கிருஷ்ணா பிக்சர்ஸ் தயாரிப்பில், கண்ணதாசனின் திரைக்கதை வசனத்தில், ஜி.ராமநாதன் இசையில், எம்.ஜி.ஆர், கலைவாணர், டி.எஸ்.பாலையா, பானுமதி, பத்மினி, டி.ஏ.மதுரம், சாண்டோ சின்னப்பா தேவர் ஆகியோர் நடிப்பில் வெளிவந்தது ‘மதுரை வீரன்’ திரைப்படம். மாபெரும் வெற்றிப் படமான இது, பல வகையிலும் முக்கியமான கவனத்தைக் கோரும் திரைப்படம்.

## தெய்வ சினிமா, பகுத்தறிவு சினிமாவானது

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வழிபடப்படும் நாட்டார் தெய்வம் ‘மதுரை வீரன்’. பெரும்பாலும் பொம்மி, வெள்ளையம்மாள் எனும் இரு மனைவியருடன் இணைந்தே வழிபாடு காணும் தெய்வம். ஆனால், புனைவான வைதீக தெய்வ அவதாரக் கதைகள் ஆதரவற்ற, தீர்க்கமான பட்டியலின சாதியான அருந்ததியர் - சக்கிலியர் அடையாளம் கொண்ட போதும், வெகுமக்களால் வணங்கப்படும் தெய்வம். இந்த அடையாளம் கருதியே இது திராவிட சினிமாவின் பகுதியாகி இருக்கலாம்.

சக்கிலியர் அடையாளம் ரகசியமற்றதெனினும், **‘மதுரை வீரன்’** கதைப் பாடல்கள், கூத்துகள், நாடகங்கள், அவரது பிறப்பை ஆண்ட பரம்பரையில் பிணைப்பதில் தவறவில்லை. இந்தப் புனைவின் மீதான விமர்சனங்கள் பல உண்டு. ஆனால், அவை திரைப்படம் வெளிவந்த காலத்தில் பேசப்படவில்லை.

இந்தத் திரைப்படமும் அந்தப் பிறப்புப் புனைவைக் கைவிட்டு விடவில்லை. அதே போல இறுதியில் ‘தெய்வமாக’ எழும் காட்சியும் உண்டு.



டி.யோகானந்த்

இங்குதான் தெய்வம் பற்றிய திரைப்படம் எப்படிப் பகுத்தறிவுவாத திராவிட சினிமாவாகிறது என்ற கேள்வி எழ வாய்ப்புள்ளது. இது கருதியே அந்தக் காட்சியிலேயே, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், ‘மக்களுக்காகத் தொண்டு செய்து மடிந்தவர்களைத் தெய்வமாக வணங்குவது உண்டு’ எனும் ஒரு படித்தான பகுத்தறிவு வாதத்தையும் வைக்கிறார்.

ஆனாலும், மதுரை வீரன் திரைப்படம் திராவிட சினிமாவின் பகுதியாவதை எம்.ஜி.ஆர் தவிர்த்த இன்னொருவரால் செய்திருக்க முடியாது எனக் கருத வாய்ப்புள்ளது. அவருக்கும் முதலில் தயக்கமிருந்ததாகத் தகவல் உண்டெனினும், திரைப்பட ஆக்கம் வெற்றிகரமாக அந்தப் புனைவுகளைச் சமன் செய்து, எம்.ஜி.ஆர் திரைப்படமாக்கிவிட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

## நாயகத்துவத்துடன் கூடிய மூலக்கதை

கண்ணதாசனின் திரைக்கதை வசனம், பெரும்பாலும் மதுரை வீரன் நாடகங்களின் போக்கையே மாதிரியாகக் கொண்டிருக்கிறது என்ற போதும், திரைப்படத்தை ‘தெய்வப் புனைவு’ சாயலிலிருந்து மீட்கும் பணியைச் சிறப்பாகவே செய்திருப்பதைக் காண முடிகிறது. அதாவது, அதற்குள்ளாக எம்.ஜி.ஆர் திரைப்படங்களின் பாணியிலான காட்சியமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. கதைக் களத்திலேயே அதற்கான வாய்ப்புகள் இருந்ததே, அதனை எளிதாக்கியிருக்கிறது.

ஆபத்தில் சிக்கும் ராஜகுமாரி பொம்மியை மீட்பது, அதற்காக தளபதியால் அநீதியாக, பிறப்பு அடையாளம் சார்ந்த இழிவைப் பேசி அவமதிக்கப்படுவது, உயிர் மீட்டவன் மீது நன்றியுணர்ச்சியுடன் ராஜகுமாரி காதல் கொள்வது என காட்சிகள் அடுக்கப்பட்டுள்ளன. இந்தக் காட்சிப் போக்குகள், சாமான்யனான திராவிட நாயகனின் முத்திரைக் குணாம்சங்கள் என்பதை விளக்கத் தேவையில்லை. கூடுதலாக, எம்.ஜி.ஆர் எனும் அதிநாயகத்துவத்தின் அடிப்படைத் தேவையான, தாமாக முன் வந்து காதலிக்கும் இரு நாயகியர் எனும் சாத்தியமும் இதில் உண்டு. ஆனால், அதே காதலிகள் திராவிட நாயகியராகவும் கிளர்ந்தெழுந்து, வாள் சண்டை செய்பவர்களாகவும், ஆணாதிக்க அதிகாரத்துக்கெதிராகக் குரல் கொடுப்பவர்களாகவும், தங்கள் எண்ணத்தில் தெளிவும் திட்டத்தில் உறுதி கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பொம்மியும் வெள்ளையம்மாளும் தங்கள் மீது திணிக்கப்படும் விருப்பமில்லா திருமணத்தில் இருந்து தப்பும் திட்டத்தைத் தாமே வகுத்து, வீரன் துணையோடு செயல்படுத்துகிறார்கள். கண்ணதாசனின் வசனங்களிலும் திராவிட சிந்தனைத் தெறிப்பு உண்டு.

‘நம்ம சின்ன ஜாதி’ எனும் தனது அப்பாவிடம், ‘சந்தர்ப்பம் வரட்டும் நாம எல்லாரும் ஒரே மனித ஜாதின்னு காட்றேன்’ என்கிறான் வீரன். அதே வீச்சில் தளபதி நரசப்பனிடம், ‘இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் ...ஜாதி என்பது மனிதன் வகுத்த அநீதி’ என்கிறான். பகுத்தறிவாளனாக, ‘எனது இஷ்ட தெய்வம் எனது தாயும் தந்தையும்தான்’ என்கிறான்.

## மறைக்கப்பட்ட சாதி அடையாளம்

திரைப்பட ஆய்வாளர்கள் கவனம் குவித்தவற்றில் ‘மதுரை வீரன்’ முக்கியமானது. ஆனால், அவற்றின் கவனம் எம்.ஜி.ஆரின் மாபெரும் வெற்றிப்படம் என்ற அளவில் ‘மலைக்கள்ளன்’, ‘மர்மயோகி’ வகைமையில் வைத்துப் பார்த்தது. திரை விமர்சனங்களும் படம் வெளிவந்த காலத்திலேயே ஏகோபித்த வரவேற்பை நல்கின. “வாள் வீச்சிலே வல்லமை காட்டும் எம்.ஜி.ராமச்சந்திரன் வாய்வீச்சிலும் வேண்டியமட்டும் - அந்த அளவுக்கு மட்டுமே - வெளுத்து வாங்குகிறார். மதுரை வீரன் பாகத்துக்குப் பொருத்தமானவர் வேறு எவரும் இல்லை என்று சொல்லும்படி நடித்திருக்கிறார் அவர்” என்றது ‘சுதேசமித்திரன்’ (1956).

‘மதுரை வீரன் கதைதானே எனப் படம் பார்க்கச் செல்பவர்களுக்கு ஆச்சர்யங்கள் காத்திருக்கின்றன’ என்றன பத்திரிக்கை விமர்சனங்கள். திரைக்கதை அமைப்பில் உருவாகியிருந்த மாற்றங்களே இந்தவிதமாக எழுதச் செய்தது. காட்சியமைப்பில் இயக்குநர் யோகானந்தின் பங்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது.

மதுரை வீரனின் அசலான அருந்ததியர்/ சக்கிலியர் அடையாளத்தை மறைத்துப் புனைவாக்கியதை தமிழ்த் திரைப்பட வரலாற்றறிஞர் தியோடர் பாஸ்கரன், ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் அதியமான் ஆகியோர் கடுமையாக விமர்சித்துள்ளனர். ஆனால், அவை திரைப்படத்துக்காக உருவாக்கப்பட்ட புனைவு அல்ல என்பது கவனத்துக்குரியது.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக ஒரு பட்டியலின சாதி நாயகன் உருவானது ‘மதுரை வீரன்’ திரைப்படத்தில்தான். எம்.ஜி.ஆர் எனும் நடிகர் / அரசியல்வாதிக்கு இந்தப் பட வாய்ப்பு மாபெரும் திறப்பானது என்பதை மறுப்பதற்கில்லை. வாய்ப்பாக அந்த நாயகன் புனைவாக ‘ஆண்ட சாதிக்காரனாகவும்’ ஆனது எம்.ஜி.ஆருக்கு அரிய வாய்ப்பானது. ஒரே நேரத்தில் தெய்வ நாயகனாகப் பொதுத் தொகுப்பு மக்களையும், குறிப்பிட்ட சாதி அடையாளம் வழியாக அந்தச் சமூகத்தினரின் முழுமையான அன்பையும் ஆதரவையும் பெற்றார். இந்தப் புள்ளியிலிருந்தே திராவிட நாயகன் என்ற அடையாளத்தை விலக்கி, வெகுமக்கள் அதிநாயகன் என்ற தடத்தைத் திட்டமிட்டு வகுத்துக் கொண்டார் எம்.ஜி.ராமச்சந்திரன்.

...படம் விரியும்

## அதிகரித்த பணப்புழக்கம்!

ஒவ்வொரு ஆண்டும் வியாபார நண்பர்களிடம் பேசும் போது துணிக் கடைகளில் மட்டுமே வியாபாரம் ‘பரவாயில்லை’ என்கிற குரல்கள் கேட்கும். இந்த ஆண்டு ‘நல்ல வியாபாரம்’ என்றார்கள். துணி அல்லாத, இனிப்பு, பட்டாசு, மின்னணுப் பொருள் விற்பனைக் கடைகள் கணிசமான அளவுக்கு வியாபாரம் பார்த்திருக்கின்றன. என்ன காரணம்? என்ற கேள்விக்குப் பரவலாக பலரும் சொன்ன பதில்!

1.06 கோடி மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பரில் தொடங்கப்பட்டது. இரண்டு மாதங்கள் அளிக்கப்பட்ட நிலையில், 3-வது மாதமான நவம்பரில் தீபாவளிக்கு முன்பே உரிமைத் தொகை வரவு வைக்கப்பட்டது.

மகளிருக்கு அரசு வழங்கிய ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பணம் தீபாவளிக்கு முன்பு புழங்க ஆரம்பித்தது. அந்தப் பணப் புழக்கம்தான் இந்த அளவுக்கு விற்பனையைச் சாத்தியமாக்கியிருக்கிறது. மூன்று மாதத்திற்கும் சேர்த்து 3 ஆயிரத்து 415 கோடியே 29 லட்சம் ரூபாய் தமிழ்நாட்டில் புழங்கியிருக்கிறது. அது வெறும் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மட்டுமல்ல. அதன் மூலம் மறைமுகமாகப் பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது. அந்தத் திட்டத்தில் தொடர்பில்லாதவர்களும் பலன் அடைந்திருக்கிறார்கள்.

**-பத்திரிகையாளர் பரகத் அலி முகநூல் பதிவிலிருந்து...**

## ஃப்ளாஷ்பேக்



### மேடையில் முதல் சந்திப்பு!

நான் 1979-ஆம் ஆண்டிலிருந்து கழக உறுப்பினராக உள்ளேன். அப்போதிலிருந்தே தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்திக்க வேண்டும் என்பது என் ஆசையாக இருந்தது. 1985-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்கு சேகரிக்க, அண்ணா நகருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அப்போது அதே மேடையில் தலைவரை சந்தித்து, அவருடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டேன். 25 வயது இளைஞராக முதன்முதலில் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டது, இந்த வயதிலும் சுவையான அனுபவமாக உள்ளது.



ராஜேந்திரன்

**-ஈ.ராஜேந்திரன், அவைத்தலைவர், கொள்ளுமேடு கிளை, ஆவடி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ‘நானே கழகத்துக்கு சொந்தம்!’

**1982-ஆம் ஆண்டு, மே 23 -ஆம் தேதி குளித்தலையில் கலைஞருக்கு ‘சட்டமன்றப் பணி வெள்ளி விழா’ நடைபெற்றது. திருச்சி மாவட்டமே விழாக் கோலம் பூண்டிருந்தது. அந்த நிகழ்வில், கலைஞருக்கு பேரறிஞர் அண்ணா படம் பொறித்த தங்கச் சங்கிலி அணிவிக்கப்பட்டது. ‘நானே தி.மு.கழகத்திற்கு சொந்தமென்று ஆகிவிட்ட பிறகு, எனக்கு அணிவிக்கப்பட்ட ஆபரணம் மட்டும் எனக்கு எப்படி சொந்தமாகும்? அதுவும் கழகத்துக்கே சொந்தமாக வேண்டும்’ என அங்கேயே அந்த ஆபரணத்தைத் தொண்டர்களிடம் அளித்து, நிதியைக் கழகத்திடம் அளித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 302




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131